# ஸத்திய தரிசனம்.

மகாத்மா காந்தி ஜீவிய சரித்திரம்.

பாகம் 4. அத்தியாயம் 37.

## கோகலேயைச் சந்திக்கச் சென்றது.

தென்னுப்பிரிக்காவில் நடை பெற்ற பல சம்பவங்களைப் பற்றி நான் மேற்போக்காகவே சொல்லிக் கொண்டு போக வேண்டியதா யிருக்கிறது. 1914 ம் வருஷத்தில் நடத்தப்பட்ட சத்தியாக்கிரகப் போரின் இறுதியில், லண்டன் வழியாக இந்தியாவுக்கு வரும்படி கோகலே யிட மிருந்து எனக்குக் கட்டளை வந்தது. எனவே ஜூலை மாதத்தில் நானும், கஸ்தூரி பாய், கால்ன்பாக் ஆகியோரும் இங்கிலாந்துக்குப் பிரயாண மானோம்.

சத்தியாக்கிரகப் போரின் காலத்தில் நான் மூன்ருவது வகுப்பில் பிரயாணம் செய்வதை ஆரம்பித்து விட்டேன். எனவே, நான் இப் பிரயாணத்துக்கும் மூன்ருவது வகுப்புப் பிரயாணச் சீட்டையே பெற்றேன். அங்குள்ள கப்பல்களின் மூன்ருவது வகுப்புக்கும், இந்தியாவின் ஓரங்களில் செல்லும் கப்பல்கள், அல்லது இந்திய ரயில்கள் முதலியவற்றின் மூன்ருவது வகுப்புக்கும் அதிக வித்தியாச மிருக்கிறது. இந்தியக் கப்பல்களில் உட்காரவும், தூங்கவும், மற்றும் பல விஷயங்களுக்கும் அசௌகரியம் அதிகம். ஆனுல் நாங்கள் இம் முறை இங்கிலாந்துக்குப் புறப்பட்ட போது நாங்கள் மூன்ருவது வகுப்பில் பிரயாணம் செய்த போதிலும், அதில் நல்ல சுத்தமும் விசாலமான இடமும் காணப்பட்டது. மேலும் கப்பல் சொந்தக்காரர்கள் எங்களுக் கென்று பிரத்தியேக சௌகரியங்களைச் செய்து கொடுத்தார்கள். எங்களுக் கென பிரத்தியேகமான இடங்களையும் செய்து கொடுத்தார்கள். நாங்கள் பழ ஆகாரத்தையே உட்கொள்வது வழக்க மாதலின் கப்பலில் ஆகாரமளிப்பவர்களும் எங்களுக்கு மட்டும் பழங்களையே அளித்து வந்தார்கள். ஆனுல் விதிப்படி மூன்ருவது வகுப்பு பிரயாணிகளுக்குப் பழங்களும் கொட்டைகளும் மிகக் குறைவாகத் தான் கிடைக்கும். இத்தகைய சௌகரியங்களால் கப்பல் பிரயாணத்தில் நாங்கள் அந்தப் பதினெட்டு தினங்களையும் சௌகரியமாகவே கழித்தோம்.

எங்கள் பிரயாணத்தின் போது நிகழ்ந்த சில சம்பவங்கள் குறிப்பிடத் தக்கவை. ஸ்ரீ. காலன்பாக் தூரதிருஷ்டிக் கண்ணுடிகளை வைத்துக் கொள்வதில் அதிகப் பிரிய முடையவராதலால் அவர் விலை யுயர்ந்த ஒன் றிரண்டு ஜதைக் கண்ணுடிகளை வைத்துக் கொண்டிருந்தார். நாங்கள் இதைப் பற்றித் தினமும் விவாதிப்பதுண்டு. நாம் எளிய வாழ்க்கையையே நடத்துவதென்று தீர்மானித்திருந்ததற்கு இவைகளை வைத்துக் கொண்டிருப்பது பொருத்த மற்ற தென்பதை அவருக்கு அறிவு கொளுத்த நான் முயற்சித்து வந்தேன். ஒரு நாள் நாங்கள் கப்பலறையின் வாயிலில் வெளிப் பக்கம் நின்று கொண்டிருக்கையில் இதைப் பற்றிய வாதம் முற்றி விட்டது.

இதை வைத்துக் கொண்டு எங்களுடைய அபிப்பிராய பேதத்துக்குக் காரணம் ஏற்படுத்துவதை விட, அதை ஏன் கப்பலில் எறிந்து விடக் கூடாது? என்று நான் கேட்டேன்.

"ஆமாம்! உண்மையிலேயே அதை எறிந்து விட வேண்டும்" என்று அவர் கூறினர்.

நான், "உண்மையாகவே நான் கூறுகிறேன்; வேடிக்கையல்ல" என்றேன்.

"நானும் உண்மையாகவே சொல்லுகிறேன்" என்று விரைவாகப் பதிலளித்தார்.

உடனே நான் அதை சமுத்திரத்தில் எறிந்து விட்டேன். அது சுமார் 7 பவுன் விலையுள்ளதாகும். ஆனுல் அவருக்கு அதனிட மிருந்த பற்றுக்கு அந்த விலையும் மிகக் குறை வென்றே கூறலாம். ஆனுல் அதை இழந்த பின்னர் அவர் ஒரு முறையேனும் அதைப் பற்றி வருத்தப்பட்டதே யில்லை. எனக்கும் ஸ்ரீ. காலன் பாக்குக்கு மிடையில் ஏற்பட்ட பல சம்பவங்களில் முக்கியமான வற்றில் இதுவு மொன்ருகும்.

இவ்வாறு நாங்கள் இருவரும் சத்திய தரிசனத்தின் பொருட்டு முயற்சித்துக் கொண்டிருந்த படியால் எங்கள் வாழ்க்கையில் புதிது புதிதாகப் பல திருத்தங்களைப் பரஸ்பரம் இருவருமாகப் பிரதி தினமும் அறிந்து கொண்டிருந்தோம். உண்மையில் சத்தியத்தைத் தரிசிக்க வேண்டு மாயின் கோபம், சுயநலம், பகைமை முதலிய குணங்களி லிருந்து விலக வேண்டியது அவசிய மாதலின் எங்களுக்கும் இயற்கையாகவே அச்சுபாவங்கள் மறைந்து வந்தன. காமக் குரோதங்களுக்கு அடக்கப்பட்ட ஒருவன், நல்ல எண்ணங்களை யுடையவனும், உண்மை யுள்ளவனும் இருக்கலாம். ஆனுல் அவன் ஒருபோதும் சத்தியத்தைத் தரிசிக்கமாட்டான். சத்தியத்தை வெற்றியுடன் தரிசிக்க விரும்புவோர் அன்பு, பகைமை, இன்பம், துன்பம் ஆகியவற்றி லிருந்து முற்றிலும் விடுதலை பெற வேண்டும்.

நாங்கள் பிரயாணப் பட்டபோது நான் உபவாச விரதமிருந்து அதிக தினங்கள் ஆகி யிருக்க வில்லை. எனக்கு சுபாவமான பலமும் திரும்பிவந்திருக்க வில்லை. பசி காணும் பொருட்டும், நான் உண்பதை ஜீரணித்துக் கொள்ளும் பொருட்டும் தேகாப்பியாசம் செய்ய விரும்பி கப்பல் மேற்றளத்தில் தினமும் சிறிது நேரம் உலாவி வந்தேன். எனினும் இச் சிறு தேகாப்பியாசம் செய்வதும் எனக்குச் சிரமமாக இருந்தது. எனவே லண்டன் போய்ச் சேர்ந்த போது என் தேக நிலைமை மிக்க கேவலமாகப் போய் விட்டதைக் கண்டேன். அங்கே நான் டாக்டர். ஜீவராஜ் மேத்தாவுடன் சினேகம் செய்து கொண்டேன். நான் அவரிடம் என் பட்டினி விரதத்தின் வரலாற்றையும் கூறி அப்போதிருந்த என் தேக நிலைமையைப் பற்றியும் கூறினேன். அவர், "சில தினங்களேனும் நீங்கள் பூரண ஓய்வு எடுத்துக் கொள்ளாவிட்டால் உங்கள் கால்கள் பயனற்றவையாகப் போய் விடக் கூடும் என்று அஞ்சுகிறேன்" என்ருர்.

அப்போது நான், அதிக நாள் பட்டினி கிடந்த ஒருவன் இழந்த பலத்தைத் திரும்பிப் பெறுவதற்கும், உணவு ஆசைக்கும் அவசரப்படக் கூடாதென்று அறிந்தேன். பட்டினி விரதத்தை அனுஷ்டிக்கும் போது கட்டுப்பாடும், ஜாக்கிரதையும் எவ்வளவு அவசியமோ அவ்வளவு அவசியமாகவே மீண்டும் உண வருந்த ஆரம்பிக்கும் போதும்அவைதேவையாயிருக்கின்றன.

எந்த நிமிஷத்திலும் மகா யுத்தம் ஆரம்பமாகலா மென்று நாங்கள் மெடிராவில் கேள்விப் பட்டோம். நாங்கள் இங்கிலீஷ் சானல் என்னும் கடலை யடைந்த போது மகா யுத்தம் ஆரம்பமாய் விட்ட தென்று அறிந்தோம். இதன் பயனுக எங்கள் பிரயாணம் சிறிது தடைப்பட்டது. அந்த சானலில் நீர் மூழ்கிக் குண்டுகள் அதிகம் போட்டிருந்தபடியால் அவைகளிலிருந்து தப்பி அவ் வழியே கப்பலை நடத்திச் செல்வது சிரமமாக இருந்தது. எனவே, சௌதாம்டன் போய்ச் சேர இரண்டு நாட்கள் பிடித்தன.

மகா யுத்தம் ஆகஸ்ட் மாதம் 3-ந் தேதி ஆரம்பமாயிற்று. நாங்கள் 6-ந் தேதி லண்டன் போய்ச் சேர்ந்தோம்.

---

# வைதீகரின் வாழ்க்கை.

ஸ்ரீ அ. கு. அண்ணுமலை எழுதியது.

1-வது அத்தியாயம்.

## பிதற்றலும், பெரு மூச்சும்.

ஜாதி மத வித்தியாச மென்னும் பேய்க்கும், ஏழை செல்வவானென்னும் வேற்றுமை மலிந்த அஞ்ஞானத்துக்கும், தீண்டாமை, உயர்வு தாழ்வெனும் நோய்க்கும் உலகம் அடிமைப்பட்டிருக்கிற தெனு மெண்ணத்தாலோ, சுயநலமே பேரின்ப மோக்ஷம்; பிற தேசங்களை வதைத்தாவது தங்கள் தேசம் முன்னேறி செழிக்க வேண்டும்; அதர்ம சூக்ஷி, பலாத்காரக் கொடும் போர் முதலியவைகளினுலும் பிறரை அடிமைபோல் நடத்துதலே சரி யென்ற அநீத சித்தாந்தங் கொண்டு ஆட்சி செய்வோரின் கொடுமைகளைக் கண்ணுல் காணக் கூடா தென்ற நோக்கத்தாலோ, எங்களைத் தொடக் கூடாது; நீங்கள் தீண்டப்படாதார்; நாங்களுயர்ந்தவர்; எங்கள் தெருவில் கூடச் செல்லக் கூடாது; நீங்கள் தொட்டதை நாங்க ளருந்தோம்; நாங்கள் சாப்பிடுவதை நீங்கள் பார்க்கக் கூடாது; நாங்கள் பூமியிலுள்ள தேவர்கள்; எங்களுக்கு நாங்கள் விரும்புவதையெல்லாம் கேட்கக் கேட்கக் கொடுத்தால் உங்களுக்கு மோக்ஷம் நிச்சயமென்று சொல்லி பிறந்தது முதல் இறக்கும் வரை சர்க்கார் வரியை விட அதிக வரி பறித்து வயிறு வளர்ப்பதோடு நீங்கள் வேதங்களைப் படித்தால் தோஷ மென்றும், மனு அதர்ம சாஸ்திரம் போல் பல உண்டாக்கி தனக்கோர் நியாயமும், பிறர்க்கோர் நியாயமும் வகுத்து சத்தியத்தை அடிப்படையாகக் கொண்ட மதத்திற்கே கேடுண்டாக்கியவர்களின் அநியாயத்தைப் பார்க்கக் கூடா தென்ற மனத்தினுலோ மறைபவன் போல் சூரியன் மேற்கே மறைந்து கொண்டிருந்தான்.

பணத்தைச் சேர்ப்பதால் கஷ்டம்; அதைப் பத்திரப்படுத்துவதால் வருத்தம்; அதனு லேற்படும் பகைகளால் துன்பம்; கடன் கொடுத்த பணம் திரும்பவும் கிடையா தொழியுமோ என்ற கவலை; கள்வர் முதலியோர்களின் தொந்தரவுகள் முதலியவை கடி நாய்கள் போல் சூழலான பணக்காரர்களைப் பற்றியும், வேலைகளோ கிடைக்க வில்லை; சோற்றுக்கோ வழி யில்லை; உண வருந்தி நாளிரண்டாயிற்று; கால் வயிற்றுக் கஞ்சிக்கும் கையில் காசில்லை; பசிப் பிணி பெருந்தொல்லை; செல்வர்களுக்கோ இரக்க மன மில்லை; எட்டாண்டுகளாகியும் புஷ்பவதியான என் பெண்ணுக்கு மண மில்லை என் றேங்கிக் கண்ணீர் விட்டு வருந்தும் ஏழைகளைப் பற்றியும், கள்ளக் கை யெழுத்து, பொய்ச் சாட்சி, பொய் ரோட்டு முதலியவைகளைப் பற்றியும், கள்வர்களுக்கும், தீயோர்களுக்கும் ஆசானுயும், தாயாயு மிருக்கும் தீய படக் காக்ஷி, ஆபாச நாவல், கெட்ட நாடகம், நடனம் முதலியவைகளைப் பற்றியும், உடன் ஜனித்த சோதரர்களையே மோசம் செய்து, பணத்தைப் பதுக்கி, பங்குகளை அநீதியாய்ப் பெருக்கி, கணக்கைத் திருத்தி வஞ்சகம் செய்யும் பாவிகளைப் பற்றியும் பக்ஷிகள் பேசிக் கொண்டு தென்றலலை யடிக்க அண்டக்கடலில் நீந்திச் சென்றன.

குற்றம் சொல்வோர் குணம் மாறுவதரிது; இஃதவர்க ளியற்கை; இவர்களிறுதியில் குற்றத்தையே யடைகிருர்கள்; தாங்க ளெவ்வளவு தூரம் குற்றத்துடன் நடக்கிருர்க ளென்பதை மறக்கிருர்கள் என்றும், குணத்தைக் கவனிப்போர் குணத்தையே யடைகிருர்கள்; குணத்தைக் கவனிப்பதினுலப் புத்தியும், அகௌரவமும், தீய சிந்தையு மகலும்; இவர்களே குணத்தை கிரஹித்து மணத்தை யடைகிருர்கள்; பிரசங்கியை நல்ல பாம்புக்கு ஒப்பிட்டா லவர் பிரசங்கத்தில் குணங் குற்றமாகிய நாகரத்தினமும், விடமுமுண்டு; குற்றத்தையே கவனிப்பவர்கள் விடத்தையும், குணத்தை உட்கொள்பவர்கள் ரத்தினத்தையு மடைகிருர்களென்றும் இனிய தென்றல் பேசி வீசிக் கொண்டிருந்தது.

காலமோ அழுகிய கனி போல் கெட்டது; சாதி ஆசாரங்களெல்லாம் பட்டது; தாழ்ந்தோ ரெல்லாம் சமத்துவம், சகோதரத்துவம், சுதந்திரமெனக் கர்ஜிக்கிருர்கள்; நம தான்ருேர்களா லேற்படுத்தப்பட்ட தர்ம நியாயத்துக்கு மீறி விட்டார்கள்; என்ன கேடு காலமோ தெரிய வில்லை; (தாங்கள் செய்யு மநியாயத்தை மறந்து) ஆங்கிலேய ரிந்தியாவில் காலூன்றியதிலிருந்து சாதி மத தர்மத்தைத் தொலைத்து விட்டார்கள்; நமது தேசத்தையும், மதத்தையும், சாதிகளையுங் கெடுத்தவர்களான ஆங்கிலேயர்களென்ன பாவத்தை யடையப் போகிருர்களோ! பெண்களும் கெட்டனர்; பிள்ளைகளும் கெட்டனர்; முன் காலத்தில் இராமச்சந்திரன் தசரதனிடமெப்படி நடந்தான்! இப்போது நம் பிள்ளையோ ஆங்கிலேயப் படிப்பால் நம்மையே எதிர்க்கிருன்; மீறிப் பேசுகிருன்: சாதி ஆசாரத்தை மீறி விட்டான்; நம் மனைவியும் பிள்ளையை யனுசரித்து நிற்கிருள்; கிணற்றில் விழு வென புருஷன் உத்தர விட்டால் விழ வேண்டியது தானே ஆடவள் கடமை! வள்ளுவர் வாக்கு மீருத வாசுகி பண்டையில் நடந்து கொண்ட மாதிரி யெல்லாம் கதை போல் மாறி விட்டதே! உலகமே அதர்மச் சேற்றி லிறங்கி விட்டதே யென்ருெரு வைதீகர் எண்ணி யெண்ணி யேங்கி மனம் புண்ணுகி பெரு மூச்சு விட்டுக் கொண்டே சென்ருர். அன்று சனி வார மாதலால் நமது வைதீகப் பிராமணர் கெருட தெரிசனம் செய்வதற்காக ஆகாயத்தைப் பார்த்த வண்ணம் வேகமாக நடந்து சென்ருர்.

அந் நேரத்தில் ஆதித்திராவிடரொருவர் தன் வயலில் நாற்று நடுவதற்காகச் சகுனம் பார்க்க வானத்தை நோக்கியபடி மடியில் விதை வாங்குவதற்காக ஐம்பது ரூபாயோடு நமது வைதீகருக்கு எதிராக வந்தார்.

(தொடரும்.)

---

## காணுமற் போனுர்.

சுமார் வயது 40 இருக்கும். உயரம் 5 அடி. கறுப்பு நிறம். பருத்த தேகம். நீண்ட பற்கள். தலை மொட்டை. பைத்தியம் கொண்டவர். அவர் பேசுவது நன்ருய் விளங்காது. பேர் கந்தன். அவரிடத்தில் உன் பேர் என்ன வென்று கேட்டால் கண்டன் என்று சொல்லுவார். அவருக்கு எப்போதும் வாய் நீர் வடிந்து கொண்டிருக்கும். இப்பேர்ப்பட்ட அடையாள முள்ளவர் 25—1—28-ல் ஏறல் ஸ்ரீ அருணுசல சுவாமிகள் தை அமாவாசை உற்சவத்தின் போது காணுமற் போய் விட்டார். அவரால் பிரயோசன மில்லையாயினும், அறிமுகம் இல்லாத ஊர்களில் அகப்பட்டுக் கொண்டு கற்களால் எறிபட்டுக் கஷ்டப்படுவா ரென்பது குறித்தே விளம்பரம் செய்கிருேம். இவரைக் கண்ட கனவான்கள் தயவு செய்து கீழ்க் கண்ட விலாசத்திற்குத் தெரிவிக்கும்படியாய்க் கேட்டுக் கொள்கிறேன். கண்டு பிடித்துத் தெரிவிப்பவருக்கு என்றும் நன்றி யறிதலுள்ளவனுவேன்.

நா. பொன்னையா நாடார்,
மஞ்சள் நீர்க்காயல்,
பழைய காயல் போஸ்ட்,
ஸ்ரீ வைகுண்டம் தாலுகா.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

## நமது 12-வது மகாநாடு.

நாடார் மகாஜன சங்கம் 11-வது மகாநாடு கும்பகோணத்தில் நடைபெற்ற கடைசி தினத்தில் ஆங்கு விஜயஞ் செய்திருந்த அருப்புக்கோட்டைப் பிரமுகர்கள் முன் வந்து அடுத்த 12-வது மகா நாட்டை அருப்புக்கோட்டையில் நடத்துவதாக ஒப்புக் கொண்டு விட்டது பற்றிப் பெரிதும் போற்றுகிறேன். இதற்குள் அவர்கள் மகாநாடு சம்மந்தமான காரியங்கள் நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் குறித்து யோசித்திருப்பார்கள் என நம்புகிறேன்.

நம்மவர்களின் ஆறூர்களில் ஒரூராயும், நம் ஜன சமுக முன்னேற்ற சாதனமான "நாடார் குல மித்திரன்" பத்திரிகையின் பிறப்பிடமாயும், மற்றும் நம் குலப் பிரகாசத்திற் கிலக்காய பல துறைக ளமையப் பெற்றதாயு முள்ள அருப்புக்கோட்டை நகரின் கண்ணே மகா நாடு நடை பெறுவதென்றால் அது எம்மட்டும் விசேஷிக்கத் தக்க பான்மையில் நடை பெறும் என்பது யாருக்கும் சொல்லத் தேவையில்லை. பொதுவாக அருப்புக்கோட்டை நாடார் பெருமக்கள் எடுத்த காரியத்தைத் தொடுத்து முடித்து பிறர் போற்றுதலுக் குரித்தான வகையில் விளங்குபவர்க ளென்பது வெளிப்படை.

இவர்கள் ஒற்றுமை ஆக்கமும், உயர்ந்த நோக்கமும் கொண்டு இலங்கி வருவது நாடார் உலகத்தில் குறிப்பிட்ட விஷயமாகும். இத்தகைய விற்பன்னர்கள் தம் மனப்பூர்ண சம்மதத்துடன் மகா நாட்டையழைத்திருப்பதிலிருந்து நம்ஜனசமுகத்திற்கே மகாநாடு நடத்துவதில் ஒரு புது மாதிரியான வழி சிருஷ்டிக்கப் படக் கூடும் என நினைக்க ஏது விருக்கிறது.

மேலும் அவ்வூர் வாலிபக்கோஷ்டியினர் ஓர் புத் துணர்ச்சி பெற்று நம் குலம், நம் தேசம் என்று ஆர்வ மேலிட்டு சேவகாபி விர்த்தி கொண்டுள்ளார்கள். இவர்கள் அயர் விலா வீரர்கள். இவ் விளைஞர்கள் நம் மகாநாடு நடத்தும் விஷயமாய் எத் துணையோ பரபரப்புக் கொண்டிருக்கலாம்! மகாநாடு நடத்தும் பெரிய தொரு பளுவு இவர்கள் தோள்கள் மேல் தா னுண்டு என்பதை அவர்கள் அறியாதவ ரல்லர். தற்காலப் போக்கில் எக் காரியமும் வாலிபர் ஒத்துழைப்பினுல்தான் ஜெயங் கொண்டு நிகழ்கிறது என்பதும், வாலிபர் கடமை குறித்தும் இவர்கள் தெரிந்தவரே யாவர். எனவே பெரியவர்க ளோடிணங்கி தம் கடனுற்ற உறுதிப்படுத்தி யிருப்பார்க ளென்றே நம்புகிறேன்.

அருப்புக்கோட்டை யென்பது நம் மகாஜனங்களின் மன மிழுக்கும் நகரமாகும். "நாடார் குல மித்திரன்" பிறந்த நாட்டொடங்கி ஆங்காங்குள்ள நம்மவர்கள் அருப்புக்கோட்டையைப் பார்க்க ஆவலுள்ளவர்களா யிருக்கிறார்கள். இன்னவர்களுக்கு இம் மகாநாடு ஓர் நற்றருண மளிப்பதாகும். எனவே மகாநாட்டுக்கு ஏராளமான பிரதிநிதிகள் வருவார்கள். இதனுல் டிக்கெட் விற்பனை திருப்திகரமாய் முடிந்து ஒரு பெருந் தொகைப் பணம் மீதப்படும் என்ப துறுதி.

ஆகையால் 12-வது மகாநாடு வெகு சிறப்பாய் நடை பெறுவதற்கு பல விதத்தும் சாதன மிருத்தல் காண்கின்றேன். மகாநாடு கால தாமத மின்றிக் குறிப்பிட்ட காலத்தில் நடை பெற அருப்புக்கோட்டை நாடார்கள் கவனம் எடுத்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

ஓர் நாடார் குலத்தவன்.

---

ஊக்கங் கோள வேண்டும்
உயரிய வழிகளில்
நோக்கம் கோள வேண்டும்
நுண்பொருள் காண் அறிவுத்
தேக்கம் கோள வேண்டும்
தீய் நெறி தனைவிட்டு
நீக்கம் கோள வேண்டும்
[illegible]

## எது நல்ல நாள்?

### சிவராத்திரியின் மகிமை.

(அருப்புக்கோட்டை ஜீவகாருண்யப் பிரசார சபையி லிருந்து.)

நல்ல நாள் வந்து விட்டது! வீடுகளுக்கு சுண்ணும்பு பூசுவோரும், காவி மண் பட்டை போடுவோரும் தங்கள் வேலையைக் கருத்தாய்ச் செய்து கொண்டு வருகிறார்கள். சைவ சமயத்தை யநுட்டிக்கும் ஒவ்வொருவர் உள்ளத்திலும் உவகை பொங்குகிறது. அன்று மலர்ந்த செந்தாமரை போல் முகம் பொலிவுறுகிறது. தூர்ந்து போய்க் கிடந்த பீடங்களும், கோவில்களும் மாசு நீக்கம் பெற்று செவ்வையாய்த் திருத்தப்படுகிறது. ஒவ்வொரு குழந்தையின் வாக்கிலுங்கூட "சிவராத்திரி" "சிவராத்திரி" என்னுஞ் சொல் தொனிக்கின்றது. விரத மநுட்டிப்போரும், குல தெய்வ வணக்கம் புரிவோரும் தங்கள் தங்கள் காரியங்களில் சுறுசுறுப்புட னிருக்கிறார்கள். ஏன்? மஹா சிவராத்திரி யல்லவா? இவைகளெல்லாம் வரப்போகும் நல்ல நாளைக் குறித்துச் செய்யப்படும் முயற்சிகளுக்கு அறிகுறி என்பதில் எள்ளளவும் சந்தேக மில்லை.

ஆனுல் அந்த நல்ல நாள் நல்ல நாளாகவே செல்ல வேண்டு மென்பது தான் நமது பிரார்த்தனை. ஒரு புனிதமான நாளில் எதைச் செய்ய வேண்டுமோ அதை மாத்திரஞ் செய்தால் நாம் எல்லோரும் சுக மடைவோ மென்பதில் ஆக்ஷேபனையே யில்லை. சைவ சமய நூல்களைக் கவனித்தால் சிவராத்திரிக்கு முதல் நாள் ஒரு வேளை உணவு மாத்திர முண்டு, சிவராத்திரி தினத்தில் யாதொரு ஆகாரமும் அருந்தாமல் பட்டினியா யிருந்து அன்றிரவு சிவபெருமானுக்கு நான்கு யாமத்திலும் விதிப்படி அபிஷேக ஆராதனை செய்து மறு நாள் அமாவாசை காலையில் போஜன மருந்த வேண்டு மென்பதோடு சிவராத்திரி நாள் முழுமையும் அமாவாசை பகலிலும் தூங்காமலிருந்து இம் மூன்று நாட்களிலும் சிவபெருமானை யன்றி வேறு எத் தேவர்களையும் வணங்கக் கூடா தென்றும், இடை விடாத அன்பினுல் சிவபெருமானது பஞ்சாக்ஷரத்தையே ஜெபஞ் செய்ய வேண்டு மென்றுஞ் சொல்லப்பட்டிருக்கிறதை அறிந்து கொள்ளலாம்.

தற் காலத்திலோ! சிவராத்திரி இரவில் வணங்கும் தேவதைகளின் எண்ணிக்கைக்குத் தான் அளவு சங்கையுண்டோ? காத்தான், கருப்பன், பிள்ளை தின்னும் ராக்காயி, பிணத்தைப் பிடுங்கும் பேச்சி, ஐயனுர், சுடலை மாடன், எல்லைக் கருப்பன், இருபத்தோரு பந்திக்காரன், மொட்டைக் கோபுரத்தான் இன்னும் எத்தனையோ எண்ண முடியாத தேவதைகளை யெல்லாம் வணங்குவதும், அவைகளுக்குத் தங்களிஷ்டம் போல் ஏதேதோ படைப்பதும், சுவாமி யாடுவதும், வரங் கொடுப்பதுமாகக் களியாட்டயர்கின்றனர். இம்மட்டோ! பிரதமை யன்று பாரி வேட்டையாம்! சுவாமிகளெல்லாம் வேட்டையாடப் போகிற நாளாம்! எந்தச் சாமியாவது அல்லது சாமியாடியாவது வேட்டை யாடுகிறார்களா? இல்லவே இல்லை. கடவுளால் உயர்ந்த அறிவுடையவ ரென்று படைக்கப்பட்ட மனிதர்கள், அறிவுத் தெய்வத்தை ஏன்—அறிவு சொரூபமான ஞானத்தை யிழந்து, வழக்கம் வழக்க மென்று சொல்லும் படு குழியில் வீழ்ந்து எலி வேட்டை, பூனை வேட்டை, பன்றி வேட்டை, மீன் வேட்டை, ஆடு, கோழி வேட்டை, முட்டை வேட்டை, சாராய வேட்டை, கள் வேட்டை முதலிய பல வேட்டைகளாடி களியாட்டயர்ந்து தீய நாளாக்குகின்றனரே! இவ்வித வணக்கஞ் செய்யும்படி எந்த நூல் கூறிற்ரே! அறிகிலோம். அந்தோ! பரிதாபம்!! பரிதாபம்!!! சைவ சமயம் இவ்வித கேவல நிலைமைக்கு வருவதற்குக் [illegible] யன்றே!

## சுகாதார வாரக் கொண்டாட்டம்.

### இலுப்பையூர்.

நாளிது பிப்ரவரி மீ 7, 8 உகளில் இலுப்பையூரில் மழை பெய்து கொண்டிருந்தபடியால் சுகாதார வாரக் கொண்டாட்டத்தை ஒத்தி வைத்து 9-உயில் தண்டோரா மூலம் ஜனங்களுக் கறிவித்து ஏராளமான ஜனங்கள் குழுமி யிருக்க ஷையூர் "சைவபானு க்ஷத்திரிய வித்தியாசாலை" யில் ஷை ஸ்கூல் மானேஜர் ஸ்ரீமான் வே. சு. ச. சுப்பையா நாடாரவர்கள் அக்கிராசனத்தின் கீழ் இனிது கொண்டாடினுர்கள். ஆரம்பத்தில் ஸ்ரீமான் பெ. குருக்காளாஞ்சி நாடாரவர்கள் கடவுள் வணக்கம் பாடி முடிக்க ஷை ஸ்கூல் ஹெட்மாஸ்டரும், சுகாதார சபை காரியதரிசியுமான ஸ்ரீமான் விசுவாச நாடாரவர்கள் சுகாதார விஷயங்களைப் பற்றி ஜனங்கள் தெள்ளிதில் உணருமாறு அரிய உபந்நியாசம் நிகழ்த்தினர். அதன் பின்னர் பள்ளி மாணவர்களுக்கு ஊரவர்களால் சிற்றுண்டிகளும், பரிசுகளும் வழங்கப் பெற்றன. அதன் மேல் மாணவர்கள் சுகாதாரப் பாடல்கள் பாடி வர ஊர்வலம் வந்து ராஜ வாழ்த்துடன் கொண்டாட்டத்தை மங்களமாய் நிறை வேற்றினர் என ஷை யூர் சுகாதார சபைப் பிரவிடென்ட் ஸ்ரீமான் பெ. அலிதீர்த்த நாடாரவர்கள் எழுதுகிறார்கள்.

---

சைவ சமயிகளே! விழிமின்! விழிமின்!! நமது சமயம் உண்மை நெறி யறியாப் பேதைகளால் உண்டாக்கப்பட்ட மத மல்ல. "சைவ சமயமே சமயம்" என்று நம் தாயுமான சுவாமிகளாலும், இன்னும் பல பெரியோர்களாலும் தீர்மானிக்கப்பட்டதன்றே? அன்பையும், ஜீவகாருண்யத்தையும், சத்தியத்தையும் அடிப்படையாகக் கொண்ட தன்றே? அது இந் நாள் என் நிலையில் இருக்கிறதென்பதை நாம் கவனிக்க வேண்டாமா? நம்மையும் நமது சமயத்தையும் சூழ்ந்து கிடக்கும் மாசுகளை யகற்றி நல் வழி காட்ட வேண்டாமா? தமிழர்களால் போற்றி வளர்க்கப்பட்ட சைவ சித்தாந்தம் உயிரோடு புதைக்கப்படுவது கண்டு நமது மனந் துடிக்க வேண்டாமா? பல தெய்வ வணக்கமும், மாயா வாத மென்னுஞ் சண்டமாருதமுஞ் சேர்ந்து நம்மையும், நமது சமயத்தையும் அழித்து வருகின்றன. சீக்கிரம் ஒன்று கூடி முயலுவோம். அந் நாள் தான் நல்ல நாள். மூட வழக்கங்களையும், பல தெய்வ வணக்கத்தையும் ஒழித்து இவ் வருஷ முதலாவது சிவராத்திரியை சிவராத்திரியாகக் கொண்டாடி சிவபெருமானது திருவருளைப் பெறுவோம். சுபம்.

பூசித்தல், வாசித்தல், போற்றல், [ஜபித்திடல்
ஆசற்ற நற்றவம், வாய்மை, அழுக் [கின்மை
நேசித்திட்டன்னமு நீ சுத்தி செய்தன் [மற்
றுசற்ற சற்புத்தி ரமார்க்க மாகுமே.

(திருமந்திரம்.)

---

கோன்று கோன்று தின்று
குடல் நிரப்பிக் கொள்ளுவது
நன்று நன்று என்று
ஞானம் ஒழிந்தார்க்கு நல்ல
தன்று அன்று என்று
அறிவு பிறக்கும் நாள்
என்று என்று என்று
[illegible]

## பொது ஜனங்கள் கவனிக்க வேண்டும்.

வாய் சாலக்காரர்களுக்கு வயிற்றுப் பிழைப்பு தற்கால வியக்கங்கள் வழங்கி வருகின்றன. இவர்கள் இயக்கங்களுக்குத் தக்க வேட மிட்டுக் கொண்டு புறப்பட்டு விடுகிறார்கள். ஏதாவது ஓர் ஊரைச் சொல்லி அவ்விடத்துப் பிரபல குடும்பத்தவ ரென்றும், ஏராளமான சொத்துகள் உண் டென்றும், அத்தனையும் உதறித் தள்ளி 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்ற தத்துவம் ஓங்கி இயக்க வீடு பாட்டைக் கைக் கொள முன் வந்ததாகவும் தேனொழுகப் பேசி சோரம் பார்த்து அகப்பட்டதைத் தட்டிக் கொண்டு போய் விடுகிறார்கள். இவர்கள் தம்மைப் பிறர் நம்புவதற்காக ஆங்காங்கே இயக்கக் கூட்டங்கள் கூட்டி சொன் மாரி பொழிந்து தம் மைப்பற்றி விளம்பரப்படுத்திக் கொள்கிறார்கள். பேர் பிரசாரகர்கள்! இவர் பிரசார மெல்லாம் பிறசோரம் தான்.

பாவனை பண்ணுவதில் பலே சாமர்த்தியர்களா யிருக்கிறார்கள். இவர்கள் சூக்ஷியை யார் அறிவார்? இயக்க அனுதாபிகள் இன்னுர்களை ஏற்று உபசரிக்கின்றார்கள். இவ் வுபசரிப்புகளையும் இவர்கள் விரும்புவதாகக் காட்டிக் கொள்வதில்லை. பூரண தியாகிகள் எனும் பொருள் பட, ஆங்காங்கு தட்டி வந்த பணத்தில் எஞ்சியதை சேபில் போட்டுக் கொண்டு தம் சொந்த ஹோதாவில் செலவு செய்து கொள்வதாகக் காட்டிக் கொள்கிறார்கள். இவ்வகையானது பிறரை ஏமாற்றுவதற்கு மிகவும் அனு கூலமானது. இது கண்டதும் ஏனையவர்கள் என்னே இவரின் தியாகம்! என மயங்கி விடுகிறார்கள். தம் வலையில் சிக்கிக் கொண்டார்கள் எனத் தெரிந்ததும் இப் போலித் தியாக மூர்த்திகள் தம் தொழிலை ஆரம்பித்து விடுகின்றனர். பலிதமாயின் உடனே மூட்டை கட்டிக் கொண்டு ஓட்டங் கொண்டு விடுகிறார்கள்.

அவர்களுக்கு இன்ன விடத்தில் கன்னம் வைக்கலாம்; இன்ன விடத்தில் வைக்க முடியா தென்பது நன்ருய்த் தெரியும். கன்னம் வைக்க முடியாத விடத்தில் ஒன்றிரண்டு பிரசங்கங்கள் நடத்தி விட்டு ஓடி விடுவர். கன்னம் வைக்கு மிடமா யிருந்தால் இப்படிச் செய்ய வேண்டும்; அப்படிச் செய்ய வேண்டு மென வேலைத் திட்டங்கள் போட்டுக் கொண்டு தருணம் பார்த்திருப்பர். சமயம் வாய்த்ததும் தம் காரியத்தை முடித்துக்கொண்டு விடுவார்கள். ஏமாந்தவர்கள் தாம் மோசம் போனதைப் பின்னுல் உணருவார்கள். அவ்வயோக்கியப் பிரசாரகர்கள் பற்றி முன்னுல் பெருமை படுத்திய இவர்கள் பின்னுல் பிடி பிடி திருடனை யென்று விரட்டுகின்றார்கள். போன பொருள் வரப்போவதில்லை; அந்நாடோடிகள் அகப்படுவதுங் கஷ்டம். எனவே இன்னனையாரை நம்பி மோசம் போகாமல் எச்சரிக்கை கொள்ளல் வேண்டு மெனப் பொது ஜனங்களுக்குத் தெரியப் படுத்திக் கொள்கிறேன்.

நாட்டு நடப்பறிந்தவன்.

---

### பொட்டல்பட்டி.

இக் கிராமம் ஸ்ரீ வில்லிபுத்தூர் தாலூகாவைச் சார்ந்தது. இங்கே எழு வீட்டு நாடார் பெரு மக்கள் ஜீவகாருண்ய சீலர்களாய் சைவம் ஓம்பி சைவ சமய நெறி வழுவாது நடை கொண்டு விளங்கி வருகிறார்கள். இச் சிவானு பூதிச் செல்வர்கள் காலை மாலை இரு வேளைகளிலும் தவருது சிவ பூஜிதம் செய்து பக்தி பரவசரா யிருந்து வருகிறார்கள். இவர் தம் பூஜித கைங்கர்யங்களுக் கிலக்காக 1000 ரூபாய் செலவு செய்து ஒரு சிவ பஜனைக் கூடம் கட்டி யிருக்கிறார்கள். அப் பஜனைக் கூடத்தில் சிவ சோதி பரப்பி யிருக்கும் செம்மைசொல்லத் தரமற்றதா யிருக்கிறது. உற்சவ காரியாதிகளாக ஆனி மாதத்தில் ஆனி தரிசனமும், மார்கழி மீ ஆருத்திரா தரிசனமும் (திருவாதிரையும்) ஒழுங்கே நடாத்தி வருகிறார்கள். இச் சைவ குழாம்போல் ஆங்காங்கே பல கோஷ்டிகள் உதயமாகின் சைவ மதப் பிரகாசம் தரணியில் ஜ்வலிக்கு மென ஸ்ரீமான் வி. எம். [illegible] எழுதுகிறார்கள்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection



சாதி குலம் பிறப்பிறப்புப் பந்த முத்தி அருவுருவத் தன்மை நாம

மேது மின்றி யெப்பொருட்கு மெவ்விடத்தும் பிரிவற நின்றியக்கஞ் செய்யுஞ்

சோதியை மாத்தூ வெளியைமனதவிழ நிறைவான துரிய வாழ்வைத்

தீதில் பரமாம் பொருளைத் திருவருளே நினைவாகச் சிந்தை செய்வாம்.

---

நாடார்குலமித்திரன்

பிரபவ ஞூ மாசி மீ அ௳ உ

## விருதுநகர், மானமதுரை ரெயில்வே.

சென்னைக் கவர்னர் மாட்சிமை தங்கிய லார்டு கோஷன் அவர்கள் மதுரைக்கு விஜயஞ் செய்த போது இராமநாதபுரம் டிஸ்ட்ரிக்ட் போர்டின் வரவேற்புப் பத்திரத்திற் களித்த பதிலில் விருதுநகர், மானமதுரை ரெயில்வே லயன் ஒன்று 1928-ம் வருஷத்தில் ஆரம்பிக்கப்படுமென்று சொல்லியதாய்த் தெரிகிறது.

இந்த லயனில் முக்கியமானதும், அதிக ஜனத் தொகையுள்ளதும், வியாபாரப் போக்குவரத்தில் அதிகமாய் லாபம் கொடுக்கத்தக்கதுமான ஊர், அருப்புக்கோட்டையே யாகும். இவ் வூருக்கு வேண்டிய உணவுப்பொருள்களும், இதர சகல சாமான்களும் வெளியூர்களிலிருந்தே வந்து சேர வேண்டியதா யிருக்கின்றன. ஆயினும் இங்கிருந்து ஏற்று மதி செய்யப் பெறும் சாமான்களில் விசேஷமாய் பருத்தி, நிலக்கடலை, பிண்ணாக்கு, எண்ணெய், சவுளி, கல் முதலியவைகள் எந்தக் காலத்திலும் வியாபாரம் நடந்து வருகிறது. சில சமையங்களில் திண்டுக்கல் முதலான இடங்களிலிருந்து நிலக் கடலை, அதன் பருப்பு முதலியவைகள் விசேஷமாய் இறக்கு மதியாகி, அதன் எண்ணெய், பிண்ணாக்கு முதலியவைகள் ஏற்று மதி செய்யப்படுகின்றன. திண்டுக்கல்லி லிருந்து பழனி மார்க்கமாய் பொள்ளாச்சி போகிற லயன் வேலை முடிந்தால், அங்கிருந்து நிலைக் கடலையும், மரங்களும் வந்து சேரக் கூடிய சௌகரியங்களு மிருக்கின்றன. அந்த வூர்ச் சரக்குகளுக்கு நேர் பாதை யில்லாமல் சுற்றுப் பாதையா யிருப்பதாலேயே ரெயில்ச் சார்ஜ் அதிகமாவதால் வியாபாரிகளுக்குத் தோதில்லாம லிருந்திருக்கிறது. ஆனால் இவ்வளவு வியாபாரங்களும் முக்கியமாய் விருதுநகர் ஸ்டேஷனிலும், சிலவியாபாரங்கள் மதுரையிலும் இறக்குமதி, ஏற்றுமதி செய்யப்படுவதால் இவ்வூர் பொது ஜனங்களுக்கும், வியாபாரிகளுக்கும் அசௌகரியமாயிருக்கிறது.

சுமார் 25 வருஷங்களுக்கு முன் இவ் வூரிலுள்ள முக்கிய வியாபாரிகளின் முயற்சியால் அருப்புக்கோட்டைக்கு மாத்திரமாவது ஒரு லயன் போட வேண்டுமென்று ரெயில்வே போர்டுக்கும், டிஸ்ட்ரிக்ட் கலெக்டருக்கும் மனுக்களும், டெபுடேஷன்களும் அனுப்பப்பட்டு, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இங்கு விஜயஞ் செய்து டோல் கேட் கணக்குகளையும், இதர நிலைமைகளையும் நேரில் தெரிந்து இந்த லயன் போட வேண்டியதென்று தீர்மானித்து விசேஷ வருமானங் கிடைப்பதற்காக விருதுநகரிலிருந்து, அருப்புக் கோட்டை, கமுதி மார்க்கமாய் இராமநாதபுரம் வரை போடலாமென்று ரிப்போர்ட் செய்தார்கள். அந்தப்படியே போடலா மென்று கவர்ன்மெண்டாரும் ஒப்புக்கொண்டு சர்வே நடந்து 1914-ம் ஞூ வேலை தொடங்குவதாக இருந்த சமையத்தில் யூரோப்பா யுத்தம் ஆரம்பித்து விட்டதால் நின்று போயிற்று.

அதன் பிறகு மானமதுரைக்கு ஒரு முக்கியமான நிலைமை யேற்பட்டதினாலோ, அல்லது வேறு காரணத்தினாலோ தான் கவர்னர் பிரபு அவர்கள் விருதுநகரிலிருந்து மானமதுரைக்குப் போடுவதாய்ப் பதிலளித்தார்கள். ஆயினும், அது விஷயமாய் யாதொரு நடவடிக்கையும் தெரியாததால் இப்போதும் இங்குள்ள பொது ஜனங்களும், வியாபாரிகளும் கூடி யோசித்து அமெரிக்கன் மிஷன் பாதிரியார், திருவாளர். ஒயிட் துரை அவர்கள் தலைமையின் கீழ் ஒருடெபுடேஷனைஇராமநாதபுரம் டிஸ்ட்ரிக்ட் கலெக்டரவர்களையும், டிஸ்ட்ரிக்ட் போர்டு பிரஸிடெண்டவர்களையும், தென்னிந்திய ரெயில்வே டிராபிக் மானேஜரவர்களையும் பார்த்து, விருதுநகர், மானமதுரை ரெயில்வே லயனை யாவது சீக்கிரம் ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டதாய்த் தெரிகிறது.

சென்னை கவர்ன்மெண்டாரவர்களும் வெகு கால வேண்டுகோளாயிருக்கும் இவ்வூர் வாசிகளின் வேண்டுகோளைக் கவனித்து, கூடிய சீக்கிரம் விருதுநகர், மானமதுரை லயன் வேலையை ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறோம்.

---

### நன் கொடை.

இலங்கை குருனி காலாவில் வதிந்து வரும் நமது சந்தாநேயர் ஸ்ரீமான் உப. சி. மா. ராயப்பநாடாரவர்கள் நம்மித்திரன் க்ஷேமநிதிக்கென ரூ 1-0-0 நன் கொடையாக அனுப்பியுள்ளார். அதை யாம் சந்தோஷத்துடன் பெற்றுக் கொண்டு அன்னவருக்கு எமது மனமார்ந்த வந்தனத்தைச் செலுத்துகிறோம்.

### ஓர் திருத்தம்.

சென்ற வார மித்திரனில் 4-ம் பக்கத்தில் "பகிஷ்காரமா, பலாத்காரமா?" என்னும் தலைப்புடன் இருக்கும் விஷயத்தின் 3—வது பாராவில் 14-வது வரி முதலில் 1914 என்றிருப்பதை 1924 என்று திருத்தி வாசித்துக் கொள்ள வேண்டுகிறோம்.

---

## விளக்கச் சுடர்.

### பிராமணரல்லார் இயக்கம்.

நாடுகள் தோறும், தேசங்கள் தோறும் வெவ் வேறு காலங்களில் ஒவ்வொரு இயக்கங்கள் ஜெனிப்பது உலக இயல் முறை. அவ்வித இயக்கங்கள் ஒரு சமயத்தில் பெயரளவில் பிறப்பிக்கப்பட்டிருப்பினும், அதை இயக்குவோரின் பரிபக்குவத்திற் கேற்பவும், கால தேச வர்த்தமானத்திற்கு பொருத்தமாயும் வேறு சமயத்தில் விழித்தெழுந்து நாட்டிடை நடமாடுவது சகஜம். அம் முறை போல் சென்னை மாகாணத்தில் பல வருடங்கட்கு முன்னர் விதைக்கப் பெற்ற பிராமணரல்லார் இயக்கமானது தற்போது தான் புதிய தொரு ஆர்வங் கொண்டு சுயமரியாதைப் புனைப் பெயர் பெற்று ஈரோடு, நாயக்கரவர்களின் இடைவிடாப் பிரசாரத்தால் ஒவ்வொரு மக்களி னிருதயத்தையும் தட்டிப் பார்த்து வருகிறது.

இது ஒரு பக்கம் மக்களில் ஓர் சாரா ரின் மனதை ஈர்ப்ப, மற்றொரு சாரார் இவ்வித இயக்கம் நாட்டுக்கு அவசியமா இல்லையா எனும் ஆராய்ச்சியில் நுழைந்தோராயும், பிறிதொரு சாராராகிய பாதிக்கப்படுவோர் விரோதப் பான்மை யினுழல் வோராயு மிருக்கின்றனர். பொதுவாக நோக்கின் எவ்வித இயக்கத்திற்கும் எக் நாட்டிலும் கக்ஷிப் பிரதி கக்ஷிகள் தோன்றுமலிரா. எனவே மேற் கூறிய சுயமரியாதை இயக்கத்திற்கு தங்கள் தங்கள் சுயமரியாதையை இழந்தா ரனைவரும் ஆதரவு கொடுத்தும் மரியாதைக் குறைவு செய்வோர் எதிர்த்தும் நிற்கவே செய்வார்.

மக்களில் உயர்வு தாழ் வில்லை; ஆண்டவன் படைப்பில் பேதங் காணுவது அன்பிற் குகந்த தில்லை; அன்பே வடிவாயுள்ள ஆண்டவனை யடைய, எங்கும் அவனும், அவன் படைப்பாயும் இலங்கும் ஜீவ பேதங்களிடத்தே கடுஞ் சித்தங் காட்டுவது முறை யில்லை; அதுவும் ஆறறிவு படைத்த மக்களில் ஒருவரை யொருவர் வஞ்சிப்பதும், கட்டுப்படுத்துவதும் நேரிய வழி யில்லை; மேல் கீழ் என்ற பேத புத்தி கற்பிப்பதும் ஞாய மில்லை; அபேதானந்தனுகிய உலக நாடக கர்த்தனிடம் பிரிவினை யில்லை; அவனிட மிருந்த னுப்பப்பட்டு அவனையே யடைய வேண்டியவர்களாகிய நம்மிடம் அவனுடைய தன்மைக ளில்லையாயின் ஜென்ப சாபல்லியமே யில்லை என்று சாஸ்திரங்களென்ன, வேதங்களென்ன, சமயங்களென்ன, சமயாதீதர்களென்ன, இன்னோரன்ன மக்கள் வாழ்க்கை வழி காட்டிகளெல்லாம் பேரிடி போல் உத்கோஷித்துக் கொண்டிரா நிற்ப, பேதம் நீக்கப் பிறந்த சுயமரியாதைப் பிரசாரத்தின் மீது பிராமணரல்லாரில் சிலர்க்கு ஏனோ வஞ்சம்? எதற்கோ தம்சம்? மாற்றம் கொள்ளற்க; சீற்றம் தவிர்க்க. பிராமணர்கள் தான் தாங்கள் கொண்ட மூடு மந்திரத்திற்கு சாவு மணி யடித்தாய் விட்டதே என்று பீதி யுற வேண்டும். ஏமாற்றியும், ஏழைகளிடம் கூசாது வாயாசாரம் பேசியும் வயிறு வளர்க்கும் காலம் செல்லாகி விட்டதே என்று ஏங்க வேண்டும். ஆனால் நெற்றி நீர் நிலத்தில் வடிய, நிலத்தைத் திருத்தி வேளாண்மை செய்து ஜீவித்தும், கஷ்டப்பட்டு சுய நம்பிக்கை கொண்டு கைத் தொழிலையே மேற் கொண்டு ஜீவியம் கழித்தும், பண்டம் மாற்றுதலில் கவனம் செலுத்தி இராப் பகலாய் விழித்திருந்து தேடிய பொருள் கொண்டு உடல் வளர்த்தும் வரும் பிராமணரல்லாதாரில் சிலர் பக்தி நிலை யூட்டி, முக்தி வழி காட்டி இன்பம் பயப்பதாய மதத்தின் பேரால் சுய நலங் கொண்டு நம்மை ஏமாற்றிப் பொருள் பறித்து தங்கள் பெண்டு பிள்ளைகளும் உண்டு களித்து திண்ணைச் சோற்றுத் தடிராமன்களாய்த் திரிந்து விட்டு நம்மையே தாழ்ந்தவன்; தொடக் கூடாது; தெருவில் நடக்கக் கூடாது; வேதம் பார்க்கக் கூடாது; கல்வி பயிலக் கூடாது; நீ சூத்திரன்; சண்டாளன் என்று நாம் வளர்த்த, நமது உணவால் கொழுத்த, நாம் கொடுத்த பொருளால் அலங்கரிக்க சகலந் தாங்கி வாய்

## என்ன செய்வார்களோ!

நம் தேசம் பரிசீலனை செய்ய அனுப்பப்பட்டிருக்கும் ராயல் கமிஷனைப் பகிஷ்கரிப்பதற்காகக் காங்கிரஸ் கக்ஷியார்கள் பலத்த பிரசாரங்கள் செய்து பெருத்த கிளர்ச்சிகள் செய்தார்கள். பகிஷ்காரக் குறியாக் இக் கக்ஷியார் வல்லமை பற்பல விடங்களில் ஹர்த்தால் நடை பெறச் செய்தது. இவர்களுக் கிணங்காதவர்களையும் பலாத்கார முறை கொண்டு ஹர்த்தாலுக் குள்ளாக்கினார்கள். தம் கக்ஷி நோக்கங் குறித்து பலாத்காரம் கை யாண்டது அருவருக்கத்தக்க காரியமாகும். ஹர்த்தால் அனுசரிக்க இஷ்ட மில்லாதவர்களுடையகடைகளைக்கொள்ளைகொண்டதாகவும், இன்னும் அவர்களைப் பல சல்லித்தனங்கள் செய்து துன்புறுத்தியதாகவும் செய்திகள் எட்டின. இவையெல்லாம் யோக்கியமான செய்கைகளாகா. தம் கக்ஷி ஆக்கத்திற்கு இத் துணை பாடுபட்டனர் போலும்! இம் மாதிரி அமளிகள் செய்தும், செய்யத் தூண்டியும் விட்டு விட்டு வெளிக்கு தம் செயலல்ல வென்றும் காலிகள் செய்தன ரென்றும் ஓலமிட்டனர்.

போகட்டும்; தமக்குள்ள பகிஷ்கார ஆர்வத்தால் இப்படி யெல்லாம் செய்திருக்கலாம். இவ் வார்வம் எம்மட்டும் இருக்கிற தென ஜனங்கள் அறிந்து கொள்வதற்கு ஏதுவாக இவர்கள் பகிஷ்காரப் பிரசாரம் ஒடுக்க 144-வது ஸெக்ஷன் இப்போது உபயோகிக்கப்பட்டிருக்கிறது. இனித் தான் காங்கிரஸ் கக்ஷிக்காரர்களின் மனப் பான்மை புலனாகும். இவர்கள் உண்மையில் தேசப் பற்றுள்ளவர்கள் என்பதும், அல்லது சுயநலமுள்ள போலித் தேசாபிமானமுள்ளவர்கள் என்பதும் வெளியாகப் போகிறது. 144 இவர்களைச் சோதிக்க வந்திருக்கிறது. ஹர்த்தால் அன்று வேலை நிறுத்தம் செய்ய மன மில்லாத சாதாரண ஜனங்களை எவ்வளவு தூரம் ஆர்வங் கொண்டு தம் வழிக்கு வரும்படி பலாத்காரம் செய்தார்களோ, அவ்வளவு தூரம் ஆர்வத்துடன் இப்போது பிறந்திருக்கும் 144—வது ஸெக்ஷனிடமும் நடந்து கொண்டால் தான் இவர்கள் உண்மையில் தேசப் பற்றுள்ளவர்கள் என அறியலாம். சுய நலமும், கோழைத்தனமும் உள்ளவர்களெனின், தம் கை வரிசைகளை சந்து பொந்துகளி லிருக்கும் சாதாரண மனிதர்களிடம் காட்டி பெருமை கொண்ட மட்டில் நின்று விடுவார்கள். 144 பிறக்கவும் என்ன செய்யலாமென்று ஒன்றும் தோன்றாமல் ஒருவர் முகத்தை யொருவர் பார்க்கிறார்கள். கூடி யோசிக்கிறார்கள். தலைவர்கள் அபிப்பிராயங் கேட்கிறார்கள். டில்லி போந்திருக்கும் திரு. ஸ்ரீநிவாசய்யங்காரைக் கூவி யழைக்கிறார்கள். யார் அபிப்பிராயங் கேட்டாலும் பகிஷ்காரத் துறை விட்டு விலகாது சாதித்து நிற்றல் தான் இவர்கள் கொண்ட கொள்கை சாதித்தவராவர். ஸெக்ஷனை மீறினால் சுகவாசம் போய் ஜெயில் வாசம் கொள்ள வேண்டுமே யென்று அடங்கி விடுவார்களோ, அன்றி ஒன்றுக்கும் அஞ்சாது ஒரு வழியாக நின்று சாதிப்பார்களோ என்று பார்ப்போம்.

கண்ணோட்டக்காரன்.

---

கூசாது பேசும் பிராமணர்கள் பால் ஏனோ அனுதாபம் காட்டல் வேண்டும்? பிராமணர்களிலும் உத்தமர் சில ரிருக்கலாம்; பிராமணரல்லாதார் பால் அனுதாபங் கொண்ட அன்னவர்கட்கு யாம் என்றும் நன்றி செலுத்தக் கடமைப் பட்டே யிருக்கிறோம். ஆனால் வைதீகம், வைதீகம் என்றும் வம்பு பேசும் பிராமண அதமர்களையும், அவர்கள் வால் பிடித்துத் திரியும் சில பிராமணரல்லாத கடையர்களையும் என்று தான் நாம் வழிப்படுத்துவதென்ற நினைவு மேற் கொண்டு அடுத்து வேண்டும் சமாதானங்கள் கூறுவாம்.

(தொடரும்.)

G. அருணாசலம்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

## மதிப்புரைகள்.

### பார்ப்பனரின் படு மோசமும், பாரத மக்களின் பரிதாபமும்.

இக்கரமம் கொண்ட புஸ்தகம் ஒன்று எமது பார்வைக்குக் கிடைக்கப் பெற்றோம். இஃது மலாய் நாட்டின் தலை நகராம் கோலாலம்பூருக்கு அண்மையிலுள்ள செந்தூல் ஸ்ரீமான் பூ. சின்னத்தம்பியவர்களால் இயற்றப்பெற்றது. இதில் கலப்பு விவாகத்தின் சிறப்பு காட்டி, பார்ப்பனர்களுக்குப் பகவானுய் விளங்கிய வியாசர் தம் இனத்தார் நலனுக்காக வேதசூதும், புராணப் புரட்சியும் செய்து வைத்தாரென்பதும், அவ்வியாசர் கூடா வொழுக்கம் கைக்கொண்டு அவ்வொழுக்கத்தையும் சாஸ்திரப்பேரால் தம் சாராருக்குள் புகுத்தி பல ஆபாசங்கள் கையாள வைத்திருக்கிறாரென்பதும், வேத புராணப் புரட்சிகளால் ஏனைய மக்களைத் தம்மவருக்கு அடிமைகளாக்கி வைத்திருப்பதுவும், அம்மக்களில் பல் வேறு பாகு பாடுகள் ஆக்கி வைத்திருப்பதுவும், பிறர் உழைக்கப் பிராமணர் தின்னப் பல புரோகிதச் சடங்குகள் ஏற்படுத்தியிருப்பதும், அவற்றுன் பாரத மக்கள் அடைந்திருக்கும் பரிதாப நிலைமையும் காட்டியிருக்கிறார். பார்ப்பனச் சூழ்ச்சிகளை பகிரங்கப்படுத்தி வரும் புஸ்தகங்களில் இதுவும் குறிப்பிடத் தக்கதாகும். இன்னனைய வெளியீடுகளைக்கண்டு பிராமணரல்லார் பெரிதும் விழிப்புக் கொள்வார்களாக. பக்கங்கள் 23 கொண்டது. விலை 10 சதங்கள் (2 அணு). வேண்டுவோர் "பூ. சின்னத்தம்பி, மொடேண் சப்ளை கம்பெனி, செந்தூல் எப். எம். எஸ்." என்ற விலாசத்திற் கெழுதிப் பெறவும்.

ஃ ஃ

### "ஜய சக்தி"

இப்பெயர் கொண்ட பத்திரிகையின் முதற் சஞ்சிகை யொன்று வரப் பெற்றோம். இது ஒரு தமிழ் மாதாந்தப் பத்திரிகையாகும். இது திருவனந்தபுரத்தினின்றும் ஸ்ரீமான் டி. கே. ராமபத்திர சர்மா அவர்கள் பத்திராதிபத்தியத்தின் கீழ் வெளிவந்திருக்கின்றது. புஸ்தக ரூபத்தில் உள்ளது. பொறிக்கப் பெற்றுள்ள விஷயங்களெல்லாம் வாசிக்கத் தக்கவையாகும். இப்பத்திரிகை தன் பெயருக்கேற்ப சக்தியாம் நம் பாரததேவி தன் விடுதலைப் போராட்டத்தில் ஜெயங்கொண்டு ஜெய சக்தி யாய் விளங்கப் பாடுகொண்டு அதற்கனுகுணமான தீண்டாமை விலக்கு, கதரபிவிர்த்தி மதுவிலக்கு முதலிய புனித வியக்கங்களிலும், மற்றும் தேசிய விஷயங்களிலும் ஈடு பட்டுழைத்து வருமாக. இது நீடுவாழ்க. வருடச் சந்தா உள்நாட்டுக்கு ரூ 0-12-0ம், வெளிநாட்டுக்கு ரூ 1-0-0 மாகும். தேவையானவர் ஷை ஆசிரியருக் கெழுதிப் பெறவும்.

ஃ ஃ

### தெரே சம்மாளின் பஜனமிர்தம்.

இப்பெயர் புனைந்த பாடல் புஸ்தகம் ஒன்று வரப்பெற்றோம். இதன் ஆசிரியர் காவல் நகர் கத்தோலிக் கிறிஸ்தவர் ஸ்ரீமான் கே. எஸ். ஏ. பாண்டியநாடாரவர்களாவர். இது குழந்தை இயேசுவின் தெரே சம்மாளுடைய் அருளைக்கிப்பாடிய பாடல்களடக்கியுள்ளது. பல வர்ண மெட்டுகளில் பாடல்களமைக்கப் பெற்றிருக்கின்றன. இது ஒவ்வொரு காதலிக் கிறிஸ்தவருக்கும் அவசியமேயாம். எட்டுப் பக்கங்கள் கொண்டது. விலை அணு 3. தேவையானவர் "ஏ. மரிய சிலுவை நாடார், ஸ்பிரிங் பீல்டு கனத்தரோடு, பொரளை, கொழும்பு" என்ற விலாசத்திற் கெழுதிப் பெற்றுக் கொள்ளவும்.

## ஸ்ரீமான் மா. வே. சண்முகவேல் நாடாரவர்கள் ஞாபகார்த்த வாசக சாலை, தூத்துக்குடி.

### 2-வது வருட நிறைவுவிழா.

ஷை நிறைவு விழா 12-2-28 ஞாயிற்றுக்கிழமை மாலை 4-மணிக்கு வாசக சாலைக் கெதிரில் அமைக்கப்பட்டிருந்த பெரிய பந்தலில் திருநெல்வேலி ஸ்ரீமான். நிருகூட சுந்தரம்பிள்ளையவர்கள் எம். ஏ. பி. எல். அவைத் தலைமையின் கீழ் நடை பெற்றது. கடவுள் வணக்கம் பாடியபின்னர், வாசக சாலையின் பேரால் ஸ்ரீ பிள்ளையவர்களுக்கு ஓர் வரவேற்புப் பத்திரம் ஸ்ரீமான் ஞா. அ.சு. சண்முகநாடாரவர்களால் வாசித்துக் கொடுக்கப்பட்டது. அதன்பின் ஸ்ரீமான் மு. பெ. மாரியப்பநாடார் அவர்கள் வாசகசாலையின் வருடாந்த அறிக்கையை வாசித்தார். அவைத்தலைவர் முன்னுரையாக, வரவேற்புப்பத்திரத்திற்கு வந்தனங்கூறினர். பின்பு சொற்பொழிவுகள் நிகழ்ந்தன. முதலாவதாக ஸ்ரீ அரு. சு. அருணசலநாடார் "நூல் பயிலும் முறை என்பது பற்றி பேசினர். பாளையங்கோட்டை சோராடக்கர் காலேஜ் ஆங்கில போதகாசிரியர் ஸ்ரீமதி டார்லிங் மாசிலாமணி அம்மாள், பி. ஏ. எல். டி. "குழந்தை வளர்ப்பு" என்ற விஷயமாய் உபந்நியாசத்தில் இந்திய மாதர் குழந்தைகளை வளர்ப்பதில் குழந்தை மாதாவின் கருப்பத்தில் உற்பத்தியாகும் தருண முதல் குழந்தையாய்ப் பிறந்து பாலியமாகும் வரை கவனிக்கவேண்டிய விஷயங்களை வெகு விபரமாக எடுத்துப் பேசினர். ஸ்ரீ மா. க. வேல்ப்பநாடார் அவர்கள் "பொருளீட்டல்" என்னும் விஷயமாய்ப் பேசுகையில் தற்காலம் நமக்கு அத்தியாவசியம் தேவையில்லாத வகையில் ஏராளமான பொருளை இந்தியர் விரயஞ்செய்து வருகிறதாயும், இவ்விதம் விரயஞ் செய்யும் பொருளை நிறுத்துவதானது பொருளீட்டும் வழிகளிலொன்றாகும் என்றார். பண்டித டி. மாசில்லாமணிநாடார் "தமிழ்க் கல்வி" என்ற விஷயமாய் அரியதோர் சொற்பொழிவு நிகழ்த்தினர்.

"சுதேசியம்" என்ற விஷயமாய் ஸ்ரீ ஆ. அருள்தங்கையா நாடார் வெகு இன்பமாய்ப் பேசுகையில் சுதேசியம் என்பது முதலில் கல்வியிலும் அவசியமாயிருக்கவேண்டுமாதலால்போதனுமுறை தமிழிலே நடத்திவருவது சுதேசியம் மாகுமென்றும் அங்ஙனம் சுய பாஷையில் நடந்து வந்தால் பெரிதும் நன்மை பிறக்குமென்றும், சுதேசியம் உடையிலிருக்கவேண்டுமென்றும், இதில் கத்தர் அணிந்து கொள்வது அவசியம் என்றும் எனெனில் ஆங்கிலேயர் இந்தியாவைத் திடீரென பகிஷ்கரித்து விட்டால் நாம் நிர்வாணிகளாய் நிற்காமல் இருப்பதற்கென்றுவது கத்தர் அணிந்து கொள்ளல் கட்டாயமாகுமென்றும் கூறினர். கடம்பூர் ஸ்ரீமான் மு. பஞ்சாபகேச ஐயர் அவர்கள் "புது யுகக் குழந்தைகள்" என்பது பற்றி பேசுங்கால், இந்தியாவில் புது யுகமொன்று பிறக்க விருக்கிறதென்றும் அந்த யுகத்திற்குப் பொருத்தமான முறையில் நாம் நமது குழந்தைகளை வளர்க்க வேண்டுமென்பதாகவும், நிறைய பொருள் ததும்பும் முறையில் ஓர் உபந்யாசம் செய்தார். இறுதியில் தலைவர், புது யுகம் பிறக்கப் போவது நிச்சயமென்றும் அதற்குத் தகுந்த முறையில் குழந்தைகளை வளர்க்கவேண்டியது தானென்றும், இங்ஙனம் வளர்க்கிறதில் ஸ்ரீமதி. அம்மாளின் குறிப்புரைகளை, கவனித்துக் கொள்ள வேண்டுமென்றும், இவையனைத்திற்கும் பொருளவசியமாகையால் பொருளீட்டலில் கவனஞ் செலுத்த வேண்டுமென்றும் சுதேசியத்தைக் கைக்கொண்டால் நிறையப் பொருள் மிகுதியாக்கலாமென்றும் கூறினர். பின்னர் வாசகசாலை அங்கத்தினர்களுக்கு உபதேசமாக பயன் பிறப்புவிக்கக் கூடிய புஸ்தகங்களையே வாசிக்கவேண்டுமென்றும், காதற் கதைகளை வாசிக்கு[illegible] [illegible]மென்றும், [illegible]தர்

தில் இரு இராட்டினங்கள் இருப்பதாக மட்டும் கூறப்பட்டிருப்பதை அடுத்த தடவையில் இத்தனை பேர் இவ்வளவு நூல் நூற்றார்கள் என்பதாகக் குறிப்பிட வேண்டுமென்பதாகவும் கூறி முடிக்க ஸ்ரீ அ. ச. நடராஜ நாடாரவர்களால் வந்தனோபசாரங் கூறப்பட்டு இரவு 10-30 மணிக்கு சபை இனிது கலைந்தது என காரியு[illegible]

## செய்தித்திரட்டு.

சின்னுட்களுக்கு முன்னர் இவ்வருப்புக்கோட்டை தாலுகா கோபாலபுரத்து மீனுக்ஷி ரெட்டியார், சிங்கமரெட்டியார் ஆகிய விருவரையும், ஷை தாலுகா அயன் ரெட்டியார்பட்டி ராமசாமி ரெட்டியாரும் அவருடைய் சகாக்களும் பொய்க்கடிதம் எழுதி கோபாலபுரத்தருகிலுள்ள ரெங்கூருணி ஓடையில் காலை சுமார் 6½ மணிக்குச் சந்திக்கச் செய்து அவர்களிடம் பலாத்காரமாக எது நோக்கங்கொண்டோ வெற்றுக் கடிதங்களில் ஆறு எழு கை ரேகைகள் வாங்கி விட்டார்கள். இது பற்றி அருப்புக்கோட்டை சப்மேஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் நடவடிக்கை நடந்து வருகிறது.

* *

டேராடூன் முசௌரி மின்சார டிராம்வே கம்பெனியில் நிர்வாக ஏஜெண்டாயிருந்த பேல்திஷாவிலானி என்பவர் ஷை கம்பெனி கணக்குகளில் லக்ஷ ரூபாய் மோசஞ் செய்து விட்டதாக ஷை கம்பெனியார் ஸப் டிவிஷனல் மேஜிஸ்ட்ரேட்டின் முன்பு வழக்குத் தொடுத்திருக்கிறார்கள். எதிரியை லாஹூரில் போலீஸார் கைது செய்திருக்கிறார்கள்.

* *

நீலகிரி ரயில் பாதையில் மலைச் சரிவு ஏற்பட்டதால் ஏற்பட்ட ரயில்போக்குவரத்துத்தடை நீங்கி எப்போதும் போல நடை பெற்றுவருகிறது.

* *

வேதாரண்யத்திற்கு அணித்தேயுள்ளவாய் மோடுளனும் கிராமத்தில் வடிவேல் தேவன் என்ற சிறுவன் தனக்கு சொந்தக்காரரும், பிரபல மிராசுதாரும், அக்கிராம மாஜி முன்சிப்புமான சிதம்பர தேவர் வீட்டில் வேலைக்கிருந்துவந்ததாகவும், அது சமயம் ஏதோ ஒரு குற்றத்திற்காக அவனை சிதம்பரதேவர் கட்டிவைத்து அடித்து அவமானப்படுத்தி ஊரைவிட்டு விரட்டிவிட்டதாகவும், பின்பு இருவரும் நேசமாகி தேவர் வீட்டுக்கு அப்பையன் போய்வந்து கொண்டிருந்ததாகவும், ஒருநாள் தேவர் மாலையில் வெளியே சென்றபோது அவரை இவன் பின்பற்றிச் சென்றதாகவும், தேவர் ஒருவிடத்தில் உட்கார்ந்தவுடன் இவன் மறைவிலிருந்து அவரை துண்டம் துண்டமாக வெட்டிவிட்டு, தேவர் வீட்டுக்கு ஓடி வந்து அங்கு அவருடைய 4 வயதுக் குழந்தையையும் வெட்டிக்கொன்று விட்டு, பின் அவர் மனைவியையும் வெட்டும் போது அவர் மனைவி கூக்குரலிட ஊரார் கூடி விட்டதாகவும், பின்னர் போலீஸார் வந்தவுடன் அரிவாளை எறிந்து விட்டு ஒரு பேனுக்கத்தியால் தன் வயிற்றை இரு முறை கிழித்துக் கொண்டு பக்கத்துக் கிணற்றில் விழுந்ததாகவும், கிணற்றில் விழுந்தவனைத் தூக்கி விசாரித்து வாக்கு மூலம் கேட்டதாகவும், வாக்கு மூலம் கொடுத்ததும் மரணம் அடைந்து விட்டானெனவும் தெரியவருகிறது.

* *

சென்னவ நாய்க்கன் பட்டியில் இராமசாமித்தேவன் என்ற வாலிபன் தன் தகப்பனுர் முத்துச்சாமித் தேவரைத் தனக்குக் கல்யாணம் செய்து வைக்கும்படி கேட்க அவர் பணமில்லாததால் அடுத்த வருஷம் செய்யலாமென்று கூற மகன் வெறிகொண்டு தகப்பனுர் படுத்திருக்கும்போது ஈட்டிக் கொண்டு குத்தி விட்டோடி விட தகப்பனுர் காயத்தால் இறந்து போனுர். விசாரணை நடந்து மகன் தூக்குத் தண்டனை யடைந்தான்.

* *

கான்பூர் ஜில்லாவில் புக்ரயான் என்ற விடத்தில் இரண்டு கூலி ஸ்திரீகள் ஒரு சுவர் பக்கத்தில் மண் தோண்டிக் கொண்டிருக்கையில் அச்சுவர் விழுந்து அவர்களிருவரும் மாண்டு போனுர்கள்.

* *

லாகூரில் லட்ச ரூபாய்கள் பெறுமான ஒரு வைரத்தை ஸ்ரீ லக்ஷ்மண சிங்கும், மற்றும் அறுவருமாக ரூ 6000 க்கு வாங்கினுர்கள். இது களவாடப்பட்டதா யிருக்குமென போலீஸார் விசாரித்து வருகின்றனர். போலீஸாரிடம் வைரத்தை விசாரணைக் காகக் கொடுக்குமாறு ஜில்லா மாஜிஸ்ட்ரேட் உத்தரவிட்டிருக்கிறார்.

* *

பயில்வான் முகமதுகாமா உலகப் பிரசித்தி பெற்ற பயில்வான் போலந்து தேச ஜிப்ஸ் கோவை பாடியாலா மகாராஜா அவர்களால் ஒழுங்கு பண்ணப்பட்ட குஸ்திப் போட்டியில் அதியற்புதமாய்த் தோற்கடித்து உலகத்தில் தான் தான் இணையிலாக் குஸ்தி வீரன் என்ற பெயரை நாட்டி விட்டார்.

* *

மஞ்சூரியாவில் சிவப்புக் கத்திக் கொள்ளைக் காரர் என்ற கூட்டத்தார் ஒரு கிராமத்தில் 250 பேர்களையும் கொரியா எல்லைப் புறத்தில் 25 பேர்களையும் கொலை செய்திருக்கிறார்கள். இது பற்றி மஞ்சூரியா துருப்புகள் தக்க நடவடிக்கை யெடுத்திருக்கிறார்கள்.

* *

லாலா லஜபதிராய் கன்னி மேயோவின் "இந்தியமாதா" புஸ்தகத்திற்கு பதிலிறுத்தலாக "துரதிஷ்டம் வாய்ந்த இந்தியா" என்றொரு புத்தகம் எழுதியிருக்கிறார். சீக்கிரத்தில் அச்சாகி வெளிவரும்.

* *

பார்டோலி விபசாய மகா நாட்டில் நிறைவேறிய வரி கொடா வியக்கத் தீர்மானப்படி அப்பக்கக் கிராமங்களில் இவ்வியக்கப் பிரசாரம் தீவிரமாய் நடந்து வருகிறது. தொண்டர்கள் அநேகம் பேரிருக் கின்றனர். இரு ஸ்திரீ தொண்டர்களுமுண்டு.

* *

மிஸ்டர். டக்ளஸ் ஆர். ஹில் என்பவர் லண்டனில் ஒரு பந்தயம் வைத்து மோட்டார் ஸைக்கிளில் உலக யாத்திரையாகப் புறப்பட்டு கல்கத்தா வந்திருக்கிறார். இடைவழியில் பல விபத்துகளுக் காளாகி யிருக்கிறார். கொள்ளைக்காரர்களிடையும், பாம்புகளிடையும், ஒரு கொல்ல வந்தவனின்றும் தப்பித்துவந்திருக்கிறார்.

* *

ஐரோப்பாவில் பெரும் புயலுண்டாகி இங்கிலாந்து உள்பட பல தேசங்களில் அபரிமிதமான பொருட் சேதங்களும், உயிர்ச் சேதங்களும் உண்டாக்கி யிருக்கிறது. பல போக்குவரத்து சாதனங்கள் தடைப்பட்டுக் கிடக்கின்றன.

* *

ரஸ்டு என்பவரும், பங்கார என்யாரும் மற்று மிரு பார்ஸிக்காரர்களும் சைகிளில் உலக யாத்திரையாக 1923-ம் ஞு புறப்பட்டுச் சென்றவர்கள் மேனுடுகளில் 44000 மைல்கள் பிரயாணம் செய்துவிட்டு இப்போது பம்பாய்க்குப் போகும்வழியில் டெல்கனூர் வந்து சேர்ந்திருக்கின்றனர்.

* *

பிரிட்டிஷ் லிபரல் கக்ஷித் தலைவராயும், பிரதம மந்திரியாயுமிருந்த லார்டு ஆஸ்குவித் தமது 74-வது வயதில் [illegible]

## ஸ்ரீமான் முதலாளி மு. மு. முத்துச்சாமி நாடாரவர்கள் ஞாபகார்த்த வாசகசாலை, அருப்புக்கோட்டை.

இவ்வாசக சாலையின் 7-வது வருடப் பூர்த்திவிழா, சென்னை சட்ட சபை மெம்பரும், பாளையங்கோட்டை வக்கீலுமான ஸ்ரீமான் தானியல் தாமஸ் நாடார் பி. ஏ. அவர்கள் அக்கிராசனத்தின் கீழ் சென்ற தை மீ 30 உயில் நடைபெறுவதா யிருந்தது. சில அசந்தர்ப்பங்கள் காரணமாய் நாளிது மாசி மீ 21 உக்கு ஒத்திவைக்கப் பட்டிருக்கிறதென்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

காரியதரிசிகள்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

## பரிசுத்தமணம்.

### தம்பதிகளுக்கு மகாத்மாவின் உபதேசம்.

மகாத்மா தமது கத்தியவார் சுற்றுப் பிரயாணத்திலிருந்து தமது மூன்றாவது குமாரர் ஸ்ரீ. ராமதாசுக்குத் திருமணம் முடிப்பதற்காக ஜனவரி 27-ந் தேதி ஆசிரமத்துக்குத் திரும்பிவந்தார். அவரது குமாரர் விவாகமென்னும் இந்தக் குடும்ப விஷயமானது பொது ஜனங்களுக்கு அவ்வளவு முக்கியமல்லாவிடினும், அப்போது நடைபெற்ற சில சம்பவங்கள் குறிப்பிடத் தக்கவையாதலின் அவற்றைப் பத்திரிகையில் வெளியிட வேண்டிய அவசியம் நேரிட்டது.

இத்திருமணத்தின் நிச்சயார்த்தம் சுமார் இரண்டு வருஷங்களுக்கு முன்னரே முடிந்திருந்தும், மணப் பெண்ணுக்கு 17-வது வயது முடிகிறவரையில் விவாகம் செய்ய மகாத்மா சம்மதிக்கவில்லையாதலின் திருமணம் தள்ளிவைக்கப்பட்டது. எனவே, பெண் வீட்டாரும் சந்தோஷமாகவே இந்த இரண்டு வருஷ காலத்தையும் கழித்துவிட்டார்கள். விவாகத்தின் போது ராமதாஸின் வயது 30. விவாகம் எளிய முறையிலும், பரிசுத்தமாகவும் நடைபெறும் பொருட்டு மணமகள் வீட்டார் பெண்ணை ஆசிரமத்துக்கு அழைத்துக் கொண்டுவந்து விட்டார்கள். அவர்கள் சுமார் பன்னிருவரே. முகூர்த்த தினத்தன்று காலைவந்து திருமணத்தை நடத்திவிட்டு அன்று மாலையே திரும்பிவிட்டார்கள்.

விவாகச் சடங்கு காலை 8-மணிக்கு ஆரம்பமாகி 9-30 மணிக்கெல்லாம் முடிந்து விட்டது. சடங்குக்கு முன் மணமகனும், மணமகளும் பட்டினி இருத்தல், தண்ணீர்த் தொட்டியைச் சுத்தம் செய்தல், நூல் நூற்றல் முதலிய தேக உழைப்பு வேலைகளைச் செய்தல், மாட்டுக் கொட்டத்தை சுத்தம் செய்தல், சிருஷ்டிகளனைத்துமிடையே ஒற்றுமை உண்டாக்குவதன் அறிகுறியாக மாங்களுக்குத் தண்ணீர் விடல், பகவத் கீதையில் ஒரு அத்தியாயம் வாசித்தல் முதலிய வேலைகளைச் செய்தார்கள். சடங்கின் முக்கிய பாகம் யாதெனின், மணமகளும் மணமகனும் ஹோம குண்டத்தின் முன்னும், பல பெரியோர்கள் முன்னும் ஒருவருக்கொருவர் உண்மையுடன் உழைப்பதாகவும், நேசப் பான்மையுடன் இருப்பதாகவும் வாக்களித்ததேயாகும். அங்கு மேளவாத்தியங்களேனும், விருந்தேனும் அல்லது வேறு ஆடம்பரங்களேனும் காணப்படவில்லை. அந்நகரின் பல பிரபலஸ்தர்கள் இவ்விவாகம் நடைபெறப் போவதைக் கேட்டு சன்மானம் செய்வதற்காக வந்திருந்தார்கள். மகாத்மா காந்தி மணமகளுக்கு பகவத்கீதை யொன்றையும், தம் கையால் நூற்ற மங்கள மாலையையும், பஜனாவளியையும், மணமகளின் தாயாருக்கு ஒரு ஜதை கைராட்டினத்தையும் கொடுத்தார். தம்பதிகளிருவரும் பொன் நகைகளையோ இதர ஆபரணங்களையோ அணிந்து கொள்ள வில்லை. தூயவெள்ளைக் கத்தர் துணிகளுடன் விளங்கினார்கள்.

காலை 9-30 மணிக்கு பிரார்த்தனை மேடையில் அனைவரும் ஒன்றாகச் சேர்ந்தார்கள். அப்போது மகாத்மா அந்தப் பரிசுத்த வேளைக்கேற்றவாறு தூய உபன்யாசம்செய்தார். அப்போது காந்திஜீ தம் வாழ்க்கையிலேயே மன முருகக்கூடிய சந்தர்ப்பங்களிலொன்றாக அதைக் கருதவேண்டுவதாயிற்று. அவர், ராமதாசும், தேவதாசும் சிறு வயதிலிருந்து தம் மேற்பார்வையில் வளர்ந்து வந்தவர்களென்று கூறும்போது கண்ணீர் உகுத்தார். எனவே, இத்தகைய சந்தர்ப்பங்களிலும் அவரும் தாம் சாதாரண மனித கோடிகளைச் சேர்ந்தவர் என்பதையே காட்டிக் கொண்டதை அங்கு கூடியிருந்தவர்கள் கண்டார்கள். அவருடைய அந்தக்குமாரர் அவரை எப்போதும் ஏமாற்றியதுமில்லை; அன்றியும் தன்னிடமுள்ள குற்றங்களை அப் [illegible] தந்தையிடம் கூறி முறையிட்டுக் கொள்வார்.

### மகாத்மாவின் உபதேசம்.

"நீ உன் குற்றங்களை ஒப்புக்கொண்டு யோக்கியனாக நடந்து வந்திருக்கிறாய். இவ்வுலகத்திலுள்ளவர்களால் நீ ஏமாற்றப்படுவாயே யன்றி, நீ ஒருவரையும் ஏமாற்ற மாட்டாய் என்பதை யறிய நான் மிகவும் சந்தோஷப்படுகிறேன். நீ இறுதிவரையும் அவ்வாறே உண்மையுடன் நடந்துகொள்வாய் என்று நம்புகிறேன். நீ உன் மனைவியின் உண்மைத் தோழனாக இருக்க வேண்டுமே யொழிய அவளது எஜமானனாக இருக்கக் கூடாது. மேலும், அவளுடைய கண்ணியத்தையும் காப்பாற்றுவாய் என்று நம்புகிறேன். அவள் உனது தேகத்தையும் ஆன்மாவையும் எவ்வாறு போற்றுவாளோ அவ்வாறே நீயும் அவளைக் கருதவேண்டும். நீங்கள் உழைப்புடனும், எளிய தன்மையுடனும், தன்னடக்கத்துடனும் உங்கள் வாழ்க்கையை நடத்துவீர்களென்று எதிர்பார்க்கிறேன். நீங்கள் பரஸ்பரம் ஒருவருக்கொருவர் காமப்பொருளாகக் கருதலாகாது.

நீங்களிருவரும் இங்கே அனுபவம் பெற்றிருக்கிறீர்கள். உங்கள் தேகம் அழிகிறவரையில் நீங்கள் இத் தாய் நாட்டுக்காகவே உழைக்கவேண்டும். நாம் ஏழ்மையுடன் பிழைக்கவே தீர்மானித்துள்ளோம். ஆதலின் நீங்கள் உழைத்து தினசரி ஆகாரத்தைப்பெற வேண்டும். உங்கள் தினசரி வாழ்க்கையிலும் பரஸ்பரம் ஒருவருக்கொருவர் துணைபுரிய வேண்டும். அவ்வாறு வேலை செய்வதிலும் நீங்கள் இன்பம் காணவேண்டும். நான் உங்களுக்கு எத்தகைய சன்மானத்தையும் கொடுக்கவில்லை. நான் அதிகம் விரும்பும் பகவத்கீதையையும், கைராட்டினத்தையும், பஜனாவளியையும் தவிர வேறொன்றும் உங்களுக்குக் கொடுக்க என்னால் இயலாது. உங்கள் மானத்தைக் காக்கக்கூடியது பருத்தி ஆடைகளாகத்தான் இருக்கவேண்டும். நான் என் நண்பர்களிடமிருந்து விலையுயர்ந்த சன்மானங்களை உங்களுக்கு வாங்கிக்கொடுத்து விட்டால் உலகம் என்னைப் பரிகசிக்குமல்லவா? இப்போது நான் என் யோக்கியதைக்குத் தக்கபடி நடந்துகொண்டதாக இருக்கிறது.

நான் எவ்வாறு கீதையை வைரச் சுரங்கமென்று கருதுகிறேனே அவ்வாறே நீங்களும் கருதி அதை உங்களுடைய வாழ்க்கைத் துணையாக வைத்துக் கொள்ளுங்கள். உங்களுக்கு ஈசுவரன் நீண்ட ஆயுளையும், சேவா சக்தியையும் கொடுத்தருள்வாராக."

### மாலை உபன்னியாசம்.

மாலை உபன்னியாசித்தபோது மகாத்மா பொது விஷயங்களைப் பற்றிப் பேசுகையில், பூர்வ வருணங்கள் பல ஜாதிகளாகவும் கிளை ஜாதிகளாகவும் மாறிவிட்டனவென்றும், இப்போது நடந்த விவாகம்தான் இவ்வாசிரமத்தில் ஒரே ஜாதியாரிடையே நடந்த விவாகமாக இருக்குமென்றும், இனி கலப்பு விவாகங்கள் நடைபெறுவதற்கு பொது ஜனங்கள் வழிகாட்டிகளாக இருக்க முடியாதாதலின் ஆசிரமம் அந்த வேலையை ஏற்றுக் கொள்ளுமென்றும் கூறினார். இன்னும் அவர் பெண்களுக்கு 20, 25 வயதாகும் வரையிலும் கலியாணம் செய்யாமல் நிறுத்திவைக்க வேண்டுமென்றும் உபதேசித்தார். மறுபடியும் அவர் விவாகச் சடங்கின் தூய தன்மையைப்பற்றிப் பேசினார். அப்போது அவர் கூறியதாவது:—"விவாகச் சடங்கைப் பிரசித்தப்படுத்துவதுதான் ஆசிரமத்தின் நோக்கம் என்று நினைத்துவிடாதீர்கள். அதன் நோக்கம் ஆயுள் முழுதும் பிரமசரியத்தை அனுஷ்டிப்பதேயாகும். போகத்தைக் காட்டிலும் அடக்கத்தை உண்டாக்க வேண்டுமென்னும் நோக்கத்தைக் கொண்டே விவாகம் அனுமதிக்கப்படும். ஆதலின் தன்னடக்கத்துடன் இருக்க விரும்புவோர் போகிகளின் வாழ்க்கையினின்றும் மாறுபட்ட முறையைப் பின்பற்றவேண்டும். சுக போகத்துக்கு ஒரு எல்லை யுண்டு என்பதையும், ஆனால் தன்னடக்கத்துக்கு அத்தகைய எல்லை இல்லை என்பதையும் மறவாதீர்கள்."

## அறம்.

மக்களாய்ப் பிறந்த நாம் ஒவ்வொருவரும் அறம் செய்யவேண்டுமென்பது ஆண்டவன் சம்மதமானதாகும். அறம் என்பது தர்மம் என்று பொருள். தருமம் செய்வது ஜன்ம சாபல்யம் தருவதாகும். "அறத்தான் வருவதே யின்பம் மற்றெல்லாம், புறத்த புகழு மில" என்பது நமது தெய்வப் புலமை வாய்ந்த திருவள்ளுவர் வாக்கு. எனவே, ஈகையாம் இவ்வறத்தின் இயல்பு எத்துணை சிறப்பு நல்குவதாம் என அறியக்கிடக்கிறது. அறம் பல வகைகளிலும் ஆற்றப்பட நிற்கிறது. அன்னதானம், சொர்ணதானம், கோதானம், பூதானம், வித்தியாதானம் எனப் பல்வேறு தானங்களுண்டு. இத்தானங்கள் புரிய இயக்கும் சக்தி என்னவெனில், இதயத்தில் பொதிந்திருக்கும் இரக்கமே யென்க. இரக்கம் தோன்றுவதெங்ஙனம்? படித்தலால், அன்றி கேள்வி முயலுதலால் உண்டாகும் அறிவு விர்த்தியாலாமெனக் கொள்ளற்க. எனினும் இவ்வகைத்தான் இரக்கம் தன் பிரகாசம் கொள்ளும். இரக்கம் என்பது இயற்கை வடிவில் படிந்துள தெய்வ குணமாகும். இக்குணம் எல்லார் மாட்டும் உண்டு. ஆனால் இது கடின குணம் கன்ம வினையால் சூழப்பெற்ற வஞ்ஞான்று தன்னொளி குன்றி இயங்கும் சக்தியற்றுப் போகிறது, இது ததியிற்றான் கடுஞ்சித்தன்—இரக்கமற்ற பாவியெனப்பல விதக்கொடுஞ்சொற்களுக்காளாகிறோம். இப்படியுள்ளவர்கள் தான் அறம்நீக்கி வாழ்க்கை கொண்டு வருகிறார்கள். இவ்வாழ்க்கை கொண்டுளாரே இறைவன் தண்டனைக் குரித்தவராவர். இதுவே பாவம் செய்வதென்பது. இரப்போர்வந்து ஏதாவது விரும்பின் இரக்கம் உதித்து அவர்பால் அன்பொளி வீசி தம்மாலியலுதவி புரிந்து அவரைத் திருப்தி செய்தனுப்பல் ஆண்டவன் ஆக்கினைப்படி நடந்து அவன் திருப்திக்குகந்ததாகிறது. இதுவே புண்ணியம். இப்புண்ணியமே மானிட ஜென்மம் சார்க்கவேண்டிய மோக்ஷம் தரும் சாதனம். இஃதறிந்த ஆன்றோர்கள் தம் தம் காலத்து மக்கள் வாழ்வு நலமெய்தவும், மறுமையில் வீடு புக்கவும் இவ்வறத்தின் சிறப்பினை எடுத்தோதி மறைந்தனர். அறிவுடையார் பின் பற்றி அவ்வழி நின்று இலங்குகிறார்கள். இவ்வழி நின்றியங்குங் காலையிலும் சிலர் தவறி விடுகின்றார்கள். செய்கை அறச் செய்கையெனினும் அது முற்றுப் பெற்றதொன்றில் முடிவதில்லை. இது அவர் யோசனையின்றி செய்வதாகும். செய்கை பொறுக்குமட்டில் பரிசுத்தரெனினும் அதுசெயப்படும் முறையில் கண் காணிப்பதில்லை. இக்கண்காணிப் பின்றேல் இவ்வறம் எல்லாருக்கும் புரியப்படாதொழியும். குறிகொண்டதொன்று விளைவதொன்றாகி விடுகிறது. உதாரணமாக அன்னச் சத்திரம், சாவடி முதலியன எடுத்துக் கொள்வோம். புண்ணியவானொருவர் பொருளுதவி செய்து தர்ம கைங்கிரியம் செய்கிறார். ஆனால் அக்காரியத்தைத் தன் பெயரால் நடத்த கூலிக்கு ஓர் ஆள் அமர்த்துவர். அக்கூலிக்கு வருபவரும் இரக்கம் கொண்டுளார் எனின், தனக்கும் அத்தர்மம் இயற்றுபவருக்கும் பயன் தேடினவராவர். இன்றேல் செய்தும் செய்யாமலாகும். பெரும்பாலும் இத்தகைய ஸ்தானங்களில் பிராமணர்களே கூலிக்குக் குந்திக்கொள்கிறார்கள். இவர்கள் குணக்கேடு எவரும் அறிந்ததொன்று தானே. இன்னார் இவ்வறச் செயல் இறைவன் அருளுக்குப் பாத்திரமாகா வண்ணம் ஏற்றத் தாழ்வுக்கோட்டை கட்டித் தடுத்து விடுகிறார்கள். பிராமணரல்லாதார் வருவது இவருக்குப் பிரியமில்லை. வந்தால் சினக்குறிப்புடன் செய்வன சரியாய்ச் செய்யாதொழிவர். "மடத்தைக்கட்டிக் குரங்கை வைத்தமாதிரி" யல்லவோ விருக்கிறதென வருத்த முகத்தான் வந்த பிராமணரல்லாதார் போக வேண்டியதுதான். தர்மம் செய்வது ஒரு சாரார்க்குத்தான் என்றுண்டோ? இம்மாதிரி செய்வதினும் சும்மாவிருப்பது நன்றென்றே கூறலாம். எற்றுக்கு வீண் பொருட்செலவு? தர்மவான் என்று பிறர் மெச்சிக்கொள்ளவா? இதால் ஆம் பயன் ஒன்றுமில்லை. உண்மையறம் ஒருவரை நீத்ததென் [illegible] எல்லோருக்கும் புரியல் வேண்டியதே. எனவே சகலத்திரளும் அனுபவிக்குமாப்போல் ஜாதிமத பேதமின்றி தக்க வழியில் நடப்பித்து சரண்யனின் தண்மை மாந்துவார்களாக.

தருமமே யுலகம் போற்றச்
சகல காரணமதாகுந்
தருமமேயழியா தென்றுந்
தாபரமாகி நிற்குந்
தருமமே தனை வேட்டோர்க்குச்
சவுக்கிய மளித்து நல்குந்
தருமமே முத்தி சேருஞ்
சாதனமென் றுட் கொள்வோம்.

சிவ. சு. சிவசுப்பிரமணியன்.

## மாணவர்களுக்குக் கூறும் மதி.

மாண்பை உண்டாக்கிறவர் என்ற காரணத்தால் மாணாக்கரெனப் பட்டார். ஆனால் இன்னாரில் சில்லோர் மாண் ஆக்கோம் என்ற சபதத்தை தம் மகத்துள் பொறித்திருப்பார்போல் செய்கைகளாகிய பள்ளிக்கூட நடைமுறைகளிலும், பரீக்ஷைகளிலும் தெரியவருகிறது. அந்தோ! விந்தைதான். இது நிந்தைக்குரித்தாமென நினைப்பூட்டுகின்றேன்.

நாடோறுந் தவறாமல் பாடசாலை படர்கிறார். ஆங்குவீண் பேச்சுப் பரிசில் வெற்றி பெறுகிறார். படிப்பதாய் நடித்துக் காலம் சடுதியாய் முடிக்கிறார். காலத்தை வெகு குசாலாய்க் கழிக்கின்றனர். உபாத்தியாயர்கள் அவர்கள் கடமையை நிறைவேற்றுகிறார்கள். அவர்கள் பொழியும் தேனுரை இவர்கள் செவிமடுத்து ருசிப்பதில்லை. உழுவுங்காலத்து ஊர்வழிதிரிந்துவிட்டு அறுவடைகாலத்து அரிவாள்கொண்டு வருதல் போல் தான் இவர்கள் செய்கை. இவர்கள் விதைப்பு எப்பான்மைத்தோ அப்பான்மைத்தே பலனுமாகும். விளைபலன் யாதென்பரோ? அஃது வகுப்புமாறுதலாம். வகுப்பு மாறுதல் உறுதிபண்ண பரீக்ஷை வருகிறது. இப்பரீக்ஷைக் கிணறு தாண்டினால்தான் அக்கரையாம் மேல்வகுப்பு குந்தல் கூடும். தாண்டுவதற்கு படிப்பு வேகந்தான் சாதனம். இச்சாதனமின்றேல் எங்ஙனம் அக்கரை சார்வது? புத்தியை மழுங்கவிடாதேயுங்கள். ஊழல் அகற்றும் முறை கொள்ளுங்கள்.

வினவிற் குரிய விடைபகர விடாப்பிடியாய்ப் படிப்புக் கொள்ளுங்கள். படிப்பெண்ணம் உளத்தின்றேல் பழுது உளது. படித்து விடைக் குவியல் சேமித்திருந்தால்தான் வினக்காரர்களுக்கு வேண்டுவன ஈந்து அவர்களால் மேல்படி யேறிக்கொள்ளலாம். சட்டியும் அகப்பையுந் தங்கத்தாலமைந்தாலும், அதில் கறியிருந்தால் தான் அகப்பையில் ஏறும் என்பது உலகறிந்ததே. இஃதேபோல் மாணவரும் எழுதுகோலும் வனப்புடன் எடுப்பும் இணையுமற்ற சீர் பெற்றிருந்தாலும், தங்கள் பாடத்துள்ள அரிய விஷயங்களாகிய வித்துக்கள் அகத்துள் முளைத்து ஆணி வேரிட்டுத் தளிர்த்துப் பூத்துக் காய்த்துக் கனிகள் கனியிருந்தாலன்றோ பரீட்சாதிகாரிகள் விடைகளுளவா என்ற பசியால் வருந்தின்கேள்விகளுக்குரிய மறுமொழிகள்என்ற கனிகளைக் கண்ணாலருந்தி வாயார வாழ்த்திக் கையாற் கரை யேற்றுவர்? இக்கனி பெறுவதெங்ஙனம்? தானாகவே பன்முறையும் பொருள் விளங்கும்படி வாசித்தல், தெரியாதவைகளைத் தன்னோடொத்த மாணவரிடங் கேட்டல், அன்னார்வினவும் கேள்விகட்கு இறை பகர்தல், பின்னும் ஐயமுளதெனின் ஆசிரியர் பக்கல் படர்ந்து தெளிதல் முதலியனவாம்.

நிற்க, இவ்விடையிறுத்தல் கனிகளை எவர்க்கு அர்ப்பணம் செய்கின்றோமோ அவர்கள் இக்கனிகளை ஒன்றேனும் தள்ளாது கொள்ளும் பான்மையில் கவர்ச்சி சூடுதல் வேண்டும். அதாவது விடைகளை நேத்திரானந்தத்திற் கொப்ப எழுதியமைத்தல் என்பது. இந் நேத்திரானந்தம் மனக்கனிவையுண்டுபண்ணி, காக்குளிர்வுமிகுந்து கருதிய கருமமாகிய மேற்படி யேறுதல் கைகூட்டிவைக்கும். எனவே மாணவர்காள்! இச்சிறுவுரையேற்று இதவழி நடைகொள்வீர்களாக.

பி. துரைச்சாமிநாடார்,
தமிழ்ப்பண்டிதர்,
சைவபானு க்ஷத்திரிய ஹைஸ்கூல்,
அருப்புக்கோட்டை.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

## இரண்டாம் அத்தியாயம்.

### தேச சரித்திரம்.

(முன் தொடர்ச்சி.)

உலகத்தில் உடல் வலிமையில் வேறு எந்த சாதிக்கும் பின்வாங்காத இந்த ஜாதியார் மிகவும் பயந்த சுபாவமுடையவர்களென்று அறிய வாசகர்கள் வியப்புறுவார்கள். நீகிரோவன் ஒருவன் ஐரோப்பியக் குழந்தை ஒன்றிடமும் பயப்படுவான். யாராவது அவனை நோக்கி ஒரு கைத்துப்பாக்கியை நீட்டினால் ஒன்று அவன் ஓடியே விடுவான்; அல்லது ஓடக் கூடத் திராணியில்லாமல் ஸ்தம்பித்து நின்று விடுவான். இதற்குக் காரணம் இல்லாமற் போகவில்லை. தங்களைப்போன்ற ஜனத்தொகையில் பெருத்த முரட்டு சாதியை ஒரு சில ஐரோப்பியர் அடக்கியாளக் கூடியதாயிருப்பது ஏதோ இந்திர ஜாலவித்தையினாலேயே என்னும் எண்ணம் நீகிரோவனின் மனதில் நன்றாகப் பதிந்திருக்கிறது. நீகிரோவர்களுக்கு ஈட்டி, வில், அம்பு இவற்றின் உபயோகம் நன்றாகத் தெரிந்திருந்தது. இவற்றை அவனிடமிருந்து பிடுங்கிக் கொண்டுவிட்டார்கள். அவன் துப்பாக்கியைப் பார்த்ததில்லை; துப்பாக்கியால் சுட்டதேயில்லையென்று சொல்லவே வேண்டாம். ஒரு நெருப்புக்குச்சிகூட வேண்டியதில்லை; ஒரு விரலை அசைக்க வேண்டியதுதான்; உடனே ஒரு சிறு குழாய் சத்தமிட்டுக் கொண்டு ஒரு மின்னல் மின்னுகிறது; குண்டு பாய்ந்து மனிதன் சாகிறான். இந்த மாயம் நீகிரோவனுக்கு விளங்கவேயில்லை. ஆதலின் அத்தகைய ஆயுதமுடையவனைக் கண்டால் அவன் கதிகலங்குகிறான். அவனும் அவனுடைய மூதாதைகளும், திக்கற்றவர்களும், குற்றமற்றவர்களுமான தம் சாதியார் பலர் இத்தகைய குண்டுகளால் கொல்லப்பட்டதைப் பார்த்திருக்கிறார்கள். இது எப்படி நேரிடுகிறதென்று இன்னுங் கூடப் பலருக்குத் தெரியாது. நீகிரோவர்களிடையே 'நாகரீகம்' வரவரப் பரவிவருகிறது. பக்திமான்களான பாதிரிமார்கள் கிறிஸ்துவின் உபதேசத்தைத் தாங்கள் அறிந்துகொண்ட அளவில் அவர்களுக்குப் போதிக்கிறார்கள். பள்ளிக்கூடங்கள் திறந்து எழுதப் படிக்கக் கற்றுக்கொடுக்கிறார்கள். ஆனால் எழுதப்படிக்கத் தெரியாதவர்களாயும், நாகரீகம் பயிலாதவர்களாயுமிருந்தபடியால் பல துன்மார்க்கங்கள் அறியாமலிருந்த நீகிரோவர் பலர் இப்போது அத்துன்மார்க்கங்களைக் கற்றுக் கொண்டு விட்டார்கள்.

நாகரீகத்துக்கு அருகில் வந்த நீகிரோ எவனும் மதுபானத் தீமையிலிருந்து தப்பித்துக் கொள்ளவில்லை. அவனுடைய திடகாத்திர தேகம் குடிமயக்கத்திலிருக்கும் போது அவன் முற்றும் பித்துப் பிடித்தவனாகி எல்லாவகைக் குற்றங்களையும் செய்கிறான். நாகரீகம் அதிகமாக ஆகத் தேவைகளும் வளரும் என்பது, இரண்டும் இரண்டும் நான்கு என்பது எவ்வளவு நிச்சயமோ அவ்வளவு நிச்சயமானது. நீகிரோவர்களின் தேவைகளை அதிகமாக்குவதற்காகவும், உழைப்பின் விலை மதிப்பை அவர்களுக்கு அறிவுறுத்துவதற்காகவும் தலைவரி ஒன்றும், குடிசை வரி ஒன்றும் அவர்களுக்கு விதிக்கப்பட்டிருக்கின்றன. இவ்வரிகள் விதிக்கப் பட்டிராவிடின் விவசாயம் செய்து பிழைக்கும் இச்சாதியார் தங்கம், வைரம் எடுப்பதற்காக நூற்றுக் கணக்கான அடி ஆழ முள்ள சுரங்கங்களில் இறங்கி வேலை செய்ய மாட்டார்களன்றோ? சுரங்கங்களில் அவர்கள் வேலை செய்ய முன்வராவிடின் தங்கமும் வைரமும் பூமியின் கர்ப்பத்திலேயே இருக்கும். மற்றும், இத்தகைய வரி விதியாவிடில் ஐரோப்பியர்களுக்கு வேலைக் காரர்களே கிடைக்க மாட்டார்கள். ஆகவே, இதன் பயனாக, இன்று ஆயிரக் கணக்கான நீகிரோ சுரங்கத் தொழிலாளிகள் 'சுரங்க நோய்' என்னும் கொடிய வியாதியினால் பீடிக்கப்பட்டிருக்கிறார்கள். இந்நோய்வாய்ப்பட்டவர்கள் பிழைத்தெழுந்திருத்தல் மிக அருமை. குடும்பங்களிலிருந்து பிரிந்து சுரங்கங்களில் வசிக்கும் ஆயிரக்கணக்கான மனிதர்கள் [illegible]

## தென்னாப்பிரிக்கா சத்தியாக்கிரஹம்.

மகாத்மா காந்தி எழுதியது.

[illegible] தைக் கைக்கொள்ள முடியுமென்று வாசகர்களே ஊகித்தறியலாம். ஆகவே அவர்கள் துன்மார்க்க வியாதிகளுக்கு எளிதில் இரையாவதில் ஆச்சரியமில்லை. தென்னாப்பிரிக்காவில் யோசனையுள்ள ஐரோப்பியர்கள் இந்த முக்கியமான விஷயத்தைப் பற்றிக் கவனம் செலுத்தாமலில்லை. எல்லாவற்றையும் யோசித்துப் பார்க்கும்போது நவ நாகரீகம் அவர்களுக்கு நன்மை செய்திருக்கிறது என்று சொல்ல முடியாதென அவ்வைரோப்பியர்களில் சிலர் திட்டமாக அபிப்பிராயப் படுகிறார்கள். தீய பயன்களைப் பற்றியோவென்றால் அவற்றை யாரும் எளிதல் காணமுடியும்.

நானூறு ஆண்டுகளுக்கு முன்னர் டச்சுக்காரர் இந்தப் பெரிய தேசத்துக்கு வந்து ஒரு குடியேற்றத்தை ஸ்தாபித்தபோது மேற்கூறிய கபடமற்ற சாதுக்களான சாதியாரே அங்கு வசித்து வந்தனர். டச்சுக்காரர்கள் அப்போது அடிமைகளை வைத்திருந்தார்கள். ஜாவாவிலிருந்து சில டச்சுக்காரர்கள் மலாய் நாட்டு அடிமைகளுடன் வந்து இப்போது கேப்காலனி என வழங்கும் பிரதேசத்தில் குடியேறினார்கள். இந்த மலாய் சாதியார் முஸ்லிம்கள். அவர்கள் உடம்பில் டச்சு சாதியாரின் இரத்தமும் கலந்திருக்கிறபடியால் டச்சுக்காரர்களின் குணாதிசயங்கள் சிலவற்றையும் அவர்கள் பெற்றிருக்கிறார்கள். அவர்கள் தென்னாப்பிரிக்கா முழுவதிலும் சிதறிக் கிடக்கிறார்களாயினும் கேப்டவுன்தான் அவர்களுடைய பிரதானகோட்டை என்று சொல்லலாம். இன்று அவர்களில் சிலர் ஐரோப்பியர்களிடம் வேலைக்காரர்களா யிருக்கின்றனர். மற்றவர்கள் சுதந்திரமாகப் பல தொழில் செய்து வாழ்கிறார்கள். மலாய் சாதி ஸ்திரீகள் நல்ல உழைப்பாளிகள்; புத்திசாலிகள். பொதுவாக அவர்கள் தூயவாழ்வு முறைகளைக் கடைப் பிடிப்பவர்கள். சலவைத் தொழிலிலும், தையல் வேலையிலும் அவர்கள் நிபுணர்கள். ஆண் மக்கள் சொற்ப வியாபாரங்கள் செய்கிறார்கள். பலர் ஜட்காவண்டி ஓட்டுகிறார்கள். ஒரு சிலர் உயர்தர ஆங்கிலக் கல்வி பயின்றவர்கள். கேப்டவுனைச் சேர்ந்தவரும், பிரசித்தி பெற்றவருமான டாக்டர் அப்துல் ரஹமான் அவர்களில் ஒருவராவர். கேப்டவுனிலிருந்த பழைய குடியேற்ற நாட்டுச் சட்டசபையில் அவர் ஓர் அங்கத்தவரா யிருந்தார். புதிய அரசியல் அமைப்பின்படி மலாய் சாதியார் பார்லிமெண்டில் ஸ்தானம் வகிக்கும் உரிமை பிடுங்கிவிடப்பட்டது.

டச்சுக்காரர்களைப்பற்றி விவரிக்கப் புகுந்த நான் இடையில் மலாய் சாதியாரைப்பற்றிக் கொஞ்சம் சொன்னேன். இனி, டச்சுக்காரர்கள் எப்படி அபிவிருத்தி யடைந்தார்கள் என்று பார்ப்போம். டச்சுக்காரர்கள் போர்த் தொழிலில் வீரர்களா யிருந்தது போலவே விவசாயத்திலும் கெட்டிக்காரர்களா யிருந்தார்கள். தாங்கள் குடியேறிய பிரதேசம் விவசாயத்துக்குப் பெரிதும் ஏற்றது என்று அவர்கள் கண்டார்கள். வருஷத்தில் சிறிது காலம் மட்டும் வேலைசெய்து 'சுதேசிகள்' வாழ்க்கை நடத்தி விடுவதையும் அவர்கள் பார்த்தார்கள். அச்சுதேசிகளை ஏன் தங்களுக்காக உழைக்கச் செய்யக் கூடாது? டச்சுக்காரர்களிடம் துப்பாக்கிகள் இருந்தன. அவர்களிடம் சூழ்ச்சித் திறமும் இருந்தது. மிருகங்களைப் போலவே மனிதர்களைப் பழக்கும் வித்தையையும் அவர்கள் அறிந்திருந்தார்கள். தங்கள் மதம் அதற்குக் குறுக்கே நிற்கவில்லை யென்றும் அவர்கள் நம்பினார்கள். ஆகவே, தங்கள் செயல் தர்மந்தான் என்ப [illegible]

[illegible] மில்லாமல் அவர்கள் தென்னாப்பிரிக்கா சுதேசிகளின் உழைப்பைக் கொண்டு விவசாயம் செய்யத் தொடங்கினார்கள்.

டச்சுக்காரர்கள் குடியேறுவதற்கு நல்ல பிரதேசங்களைத் தேடிக் கொண்டிருந்ததுபோலவே ஆங்கிலேயரும் தேடிக்கொண்டிருந்தனர். எனவே அவர்களும் நாளடைவில் இவ்விடத்துக்கு வரத் தலைப்பட்டார்கள். ஆங்கிலேயரும் டச்சுக்காரர்களும் தாயாதி சகோதரர்களே யாவர். அவர்களுடைய குணாதிசயங்களும், அபிலாசங்களும் ஏறக்குறைய ஒத்திருந்தன. ஒரே சூளையில் வெந்த பாண்டங்கள் அடிக்கடி முட்டிக்கொள்ள நேருதல் இயல்பன்றோ? எனவே, இவ்விரண்டு சாதியாரும் தத்தம் அநுகூலங்களைத் தேடிக் கொண்டும் நீகிரோவரை அடக்கிக் கொண்டும் வருகையில் தாங்களே முட்டிக்கொண்டார்கள். முதலில் விவாதங்களும் பின்னர் சண்டைகளும் நடந்தன. மஜூபா குன்றில் ஆங்கிலேயர் தோல்வியுற்றனர். இதிலேற்பட்ட மனத்தாங்கலானது வர வர முற்றிக் கடைசியில் போயர் யுத்தத்தில் வந்து முடிந்தது. இந்த யுத்தம் 1889 லிருந்து 1902 வரையில் நடந்தது. கடைசியாக, தளபதி க்ரான்ஞ்சே சரணடைந்தபோது லார்டு ராபர்ட்ஸ் மஜூபாவுக்குப் பழிக்குப் பழி வாங்கியாகி விட்டது என்று விக்டோரியா மகாராணிக்குச் செய்தியனுப்பினார். ஆனால் போயர் யுத்தத்துக்கு முன்னால் மேற்கூறிய முதலாவது முட்டுதல் ஏற்பட்டபோது, டச்சுக்காரரில் பலர் பெயரளவில் கூட பிரிட்டிஷ் ஆதிக்கத்தின் கீழ் இருக்க விருப்பமின்றி தென்னாப்பிரிக்காவின் உட்பிரதேசங்களுக்குள் செல்லலானார்கள். டிரான்ஸ்வால், ஆரஞ்சு பிரீஸ்டேட் மாகாணங்களுக்கு விதை போட்டவர்கள் இவர்கள்தான்.

இந்த டச்சுக்காரர்களுக்குத் தென்னாப்பிரிக்காவில் போயர்கள் என்ற பெயர் வழங்கலாயிற்று. தாயைக் குழந்தை பற்றிக் கொண்டிருக்கு மாறுபோல் அவர்கள் தங்கள் தாய் மொழியை விடாது பற்றி அதைக் காத்து வந்திருக்கிறார்கள். தாய் மொழிக்கும் சுதந்திரத்துக்கு முள்ள நெருங்கிய தொடர்பை அவர்கள் நன்குணர்ந்திருக்கிறார்கள். ஆகவே எத்தனையோ தாக்குதல்களுக்கு ஈடுகொடுத்து அவர்கள் தங்கள் தாய்மொழியைக் காப்பாற்றிவந்திருக்கிறார்கள். அப்பாஷை போயர்களின் மேதைக் கேற்ற ஒரு புதிய வடிவம் கொண்டிருக்கிறது. அவர்கள் ஹாலந்துடன் நெருங்கிய சம்பந்தம் வைத்துக்கொள்ள முடியாதது இத்திரிபுக்குக் காரணமாகும். ஸம்ஸ்கிருதத்திலிருந்து தோன்றிய பிராகிருத பாஷையைப்போல் அது டச்சிலிருந்து தோன்றிய பேசும் மொழியாகும். தங்கள் குழந்தைகளுக்கு அநாவசியமான சிரமம் கொடாமலிருக்கும் பொருட்டு, அவர்கள் இந்தப் பேசும் பாஷைக்கு 'டாஅல்' என்று பெயர் கொடுத்து அதற்கு ஒரு சாசுவத அமைப்பும் அளித்து விட்டார்கள். அவர்களுடைய புத்தகங்கள் 'டாஅல்' பாஷையிலேயே எழுதப்படுகின்றன. அவர்களுடைய குழந்தைகள் அந்த பாஷை மூலமாகவே கல்விபயில்கிறார்கள். தென்னாப்பிரிக்கா பார்லிமெண்டின் போயர் அங்கத்தினர் அந்த பாஷையிலேயே பேசுவதென்னும் உறுதி கடைப்பிடித்து வருகிறார்கள். தென்னாப்பிரிக்கா ஓர் ஐக்ய தேசமான பிறகு 'டாஅல்' அல்லது டச்சு பாஷையும் ஆங்கில மொழியும் தென்னாப்பிரிக்கா முழுவதும் உத்தியோக முறையில் சமமாகப் பாவிக்கப் படுகின்றன. ஆதலின் அரசாங்க கெஜட்டுகள், பார்லி [illegible] வை இரண்டு பாஷைகளிலும் எழுதப்படுகின்றன.

போயர்கள் எளியவாழ்வு முறையும், கபடமற்ற தன்மையும் கொண்டவர்கள்; சமயப்பற்றுள்ளவர்கள்; விஸ்தாரமான வயல்களுக்கிடையே அவர்கள் வீடு கட்டிக்கொண்டு வாழ்கிறார்கள். இவ்வயல்களின் விஸ்தீரணத்தைப் பற்றி இந்தியாவிலுள்ளவர்கள் அறிந்து கொள்ளுதலே கஷ்டம். இந்தியாவில் வயல் என்றால் சாதாரணமாக ஓர் ஏக்கரா அல்லது இரண்டு ஏக்கராவையே குறிக்கும். தென்னாப்பிரிக்காவில் ஒரே ஒரு குடியானவன் ஆயிரக்கணக்கான ஏக்கரா நிலங்களுக்குச் சொந்தக்காரனாயிருப்பான். இவ்வளவு நிலத்தையும் ஒரேயடியாகச் சாகுபடி செய்துவிட வேண்டுமென்று அவன் கவலைப் படுவதில்லை. யாராவது இது குறித்து அவனிடம் வாதம் செய்தால் அவன் "அது தரிசாகக் கிடக்கட்டும். இப்போது தரிசாகக் கிடந்தால் நமது சந்ததிகள் பயிர் செய்யும் போது நல்ல பலன் கொடுக்கும்" என்பான்.

போயர் ஒவ்வொருவனும் சண்டையில் சமர்த்தனாவான். போயர்கள் தங்களுக்குள் எவ்வளவு சண்டையிட்டுக் கொண்டாலும்; தங்கள் சுதந்திரத்துக்கு அபாயம் நேரிடுங் காலத்தில் எல்லாரும் ஒன்று பட்டு, ஒரேமனிதன் போல் சண்டையிடுவார்கள். அவர்களுடைய சுதந்திரப் பற்று அவ்வளவு அதிகமானது. போர்த்தொழில் அந்த சாதிக்கே இயற்கையானபடியால் அவர்களுக்குப் பயிற்சி அதிகம் தேவையேயில்லை. தளபதி ஸ்மட்ஸ், தளபதி டிவெட், தளபதி ஹெர்ட்ஸாக் எல்லாரும் வக்கீல் தொழிலிலும், விவசாயத்திலும் கெட்டிக்காரர்களா யிருந்ததுபோலவே போர்த் தொழிலிலும் சமர்த்தர்களாயிருந்தார்கள். தளபதி போதாவின் வயல் ஒன்பதாயிரம் ஏக்கரா விஸ்தீரணமுள்ளது. விவசாய நுட்பங்கள் எல்லாம் அவருக்கு நன்றாகத் தெரியும். சமாதானப் பேச்சு பேசுவதற்காக அவர் ஐரோப்பாவுக்குச் சென்றபோது, அவரைப்போல் ஆடுகளின் தாரதரத்தை அறிந்து சொல்லக் கூடியவர் ஐரோப்பாவிலேயே ஒருவருமில்லை யென்பதாகச் சொல்லப்பட்டது. அக்கிராசனர் குரூகர் காலஞ்சென்று விடவே அவருடைய ஸ்தானத்துக்கு தளபதி போதா வந்திருந்தார். அவர் ஆங்கிலத்தில் சிறந்த ஞான முடையவர். எனினும் அவர் இங்கிலாந்தில் அரசரையும் மந்திரிகளையும் கண்டு பேசினபோது தாய் மொழியிலேயே பேச முற்பட்டார். இது சரியன்றென யார் சொல்லமுடியும்? தமது ஆங்கில ஞானத்தைக் காட்டும் பொருட்டாக அவர் தவறு செய்யக்கூடிய சந்தர்ப்பத்துக்கு ஏன் இடங்கொடுக்க வேண்டும்? சரியான பதத்தைக் கண்டு பிடிக்கும் முயற்சியில் அவருடைய எண்ணப் போக்கு தடைப்படலாமன்றோ? அதற்கு ஏன் இடங்கொடுக்க வேண்டும்? தாம் கேட்டிராத ஆங்கில வழக்குச் சொல் எதையேனும் மந்திரிகள் உபயோகித்து விடலாம். அவர்கள் கருத்தை அறிந்து கொள்ளாமல் தாம் தவறான பதில் கொடுத்துக் குழப்பமடையலாம். இதனால் தமது கட்சிக்கே பாதகம் விளையலாமல்லவா? இத்தகைய பெருந்தவறை அவர் ஏன் செய்யவேண்டும்?

(தொடரும்.)

இமய முதல் குமரி வரை
எங்களது நாடு

சமய நெறி தவறாத
சத்திய நன்னாடு

சிமய உச்சி மேனின்றும்
திரைகடலின் கீழ்நின்றும்

இமையதனைக் கொட்டாமல்
எங்களது நாடு காப்போம்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection